விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 வைகாசி 26 ரம்ழா 18 இதழ் 118
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 8-6-1985

## ஊர்காவல் படையின் ஆயுதங்களை
# தீவிரவாதிகள் கைப்பற்றினர்!
### ஆயுதப்படை வேட்டையில் துப்பாக்கிகள் மீட்பு

(கொழும்பு)

பதினைந்து பேரைக்கொண்ட தீவிரவாதிகள் குழு ஒன்று நேற்று முன்தினம் இரவு மதவாச்சியின் வடக்கே உள்ள அளுத்கம என்னும் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள ஊர்காவல் படையினரின் ஆயுதங்களைப் பறித்துக்கொண்டு சென்றுவிட்டதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இத்தீவிரவாதிகள் அநுராதபுரத்துக்கும் வவுனியாவுக்கும் இடையே நேற்று வான் ஒன்றைக் கடத்திக்கொண்டு வந்தார்களென்றும், இரண்டு

(8-ம் பக்கம் பார்க்க)

### வான் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் நேற்று பிற்பகல் 'வான்' ஒன்று இனந் தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டது. (க)

### ரயில் பயணிகள் தாக்கப்பட்டனர்!

(மாகோ)

மட்டக்களப்பிலிருந்து நேற்று முன்தினமிரவு

[8ம் பக்கம் பார்க்க]

## திருகோணமலை மாவட்டம்: வன்செயல்களின் எதிரொலி ●●●
# 16 முகாம்களில் 10000 அகதிகள்
# மூதூர் காடுகளில் 10,000 பேர்!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த வாரம் தலைதூக்கிய வன்செயல்களில் பாதிக்கப்பட்ட சுமார் பத்தாயிரம் அகதிகள், திருகோணமலையில் பதினாறு முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். அதே நேரத்தில் சுமார் மூவாயிரம் பேர் (630 குடும்பங்கள்) வெருகல் சென்றுள்ளனர்.

நிலைமை இவ்வாறு இருக்க குச்சவெளி, திரியாய், கும்புறுப்பிட்டி ஆகிய இடங்களிலிருந்து பயத்தின் காரணமாக சுமார் பத்தாயிரம் மக்கள் மூதூர் காடுகளில் ஒளித்து வாழ்கின்றார்கள். (8-ம் பக்கம பார்க்க)

### நள்ளிரவில் அட்டகாசம்; 5 வீடுகள் சேதம்

(கொழும்பு)

கொட்டாஞ்சேனை ஜம்பட்டா வீதியில் நேற்றுமுன்தினமிரவு பதினொன்றரை மணியளவில் ஒரு குழுவினர் நடத்திய அட்டகாசத்தில் ஐந்துவீடுகள் சேதமடைந்தன.

அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் காயமடைந்தார்.

போதையின்பின் பாதை மாறிய மேற்படி குழுவினரே இந்த அட்டகாசத்தை நடத்தினராம்

### லலித் மறுப்பு

(கொழும்பு)

திருகோணமலைச் சம்பவங்களில் மே மாதம் 27ம் திகதிக்குப் பின்னர் தமிழரும் சிங்களவருமாக முப்பதுபேர் மட்டுமே இறந்துள்ளனர் என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்

[8-ம் பக்கம் பார்க்க]

### பிரிட்டிஷ் தூதரகத்தில் ரவீந்திரன்

(கொழும்பு)

லண்டனிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை தவறுதலாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட திரு. கந்தையா ரவீந்திரன் எனும்

[8ம் பக்கம் பார்க்க]

### ரூ. 5 லட்சம் போதைவஸ்து கடத்தல்: இளைஞர் கைது!

(கொழும்பு)

ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான 'ஹிரொயின்' என்னும் போதைப்பொருளை நாட்டுக்குள் கடத்த முயன்ற இலங்கையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை கட்டுநாயகா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

இவர் திருச்சியிலிருந்து கொழும்புக்கு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. போதைவஸ்தின் நிறை இரண்டரைக் கிலோ கிறாம் ஆகும். (ரா)

### செய்தி பற்றி ஒரு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''பலாலி முகாமிலிருந்து 40 இளைஞர்கள் விடுதலை'' என்ற தலைப்பில் கடந்த புதன்கிழமை 5-ம் திகதி 'ஈழநாடு' வில் வெளிவந்த செய்தியில் ''......இராணுவ முகாமிலிருந்து வசாவிளான் சந்தி வரை நடந்துவந்த இவ்விளை

(8ம் பக்கம் பார்க்க)

## "நாடு முழுவதும் மக்கள் பயத்துடன் வாழ்கின்றனர்"
### பாராளுமன்றத்தில் அத்தனகல எம். பி.

(கொழும்பு)

"இலங்கையில் இன்று சகல மக்களும் பயத்துடன் வாழ்கின்றனர். பயம் என்பது இலங்கை மக்களுக்கே சொந்தமான தொன்றுகிவிட்டது. நேற்று முன்தினம் கொழும்பில் ஒரு ரயர் வெடித்தது. இச்சத்தத்தைக் கேட்டவுடன் மக்கள் நாலா பக்கமும் சிதறி ஓடினர்கள். தற்போது நாடு முழுவதிலும் இந்த நிலைதான் காணப்படுகிறது."

இவ்வாறு அத்தனகல எம். பி திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

"குளியாப்பிட்டியில் மாலை ஐந்து மணிக்குப் பின்னர் சன நடமாட்டமே காணப்படுவதில்லை. மக்கள் ஐந்து மணிக்கெல்லாம் வீடுகளைப் பூட்டிக்கொண்டு இருந்துவிடுகின்றார்கள்.

"திருகோணமலையில் மூன்று இன மக்களும் தற்போதைய சம்பவங்களினால் அகதிகளாகியுள்ளனர். முன்னர் வந்த தகவல்களின்படி திருகோணமலை

(8ம் பக்கம் பார்க்க)

### அந்த வங்கி மீண்டும் இயங்கும்

(கொழும்பு)

நேற்று மூடப்பட்ட 'ஓவர் ஸீஸ் ட்ரஸ்ட் வங்கி' திங்கட்கிழமை முதல் இயங்கும்

ஹாங்கொங்கில் தலைமையகத்தைக் கொண்ட இந்த வங்கியையும் அதன் முழுக் கிளைகளையும் ஹாங்கொங் அரசு தனது உடைமையாக்கிவிட்டது.

### ✯ யாழ். ப. நோ. கூ. சங்க பெற்றேல் தாங்கியில் ஆறு கலன் தண்ணீர்!

[யாழ்ப்பாணம்]

யாழ். ப. நோ. கூ. சங்க எரிபொருள் நிலையப் பெற்றேல் தாங்கியை, நேற்றுக்காலை பெற்றோலியம் கூட்டுத்தாபனப் பரிசோதனைக்குழுவினர் சோதனையிட்டபோது அதற்குள் பெற்றேலுடன் ஆறு கலன் தண்ணீர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இத்தண்ணீர் எப்படி அதற்குள் வந்தது என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் நேற்றுக்காலை யாழ். பெற்றோலியம் கூட்டுத்தாபனக்கிளை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு யாழ். நக

(8ம் பக்கம் பார்க்க)

### வர்த்தக நிலைய கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ் மின்சார நிலைய வீதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் நேற்றுக்காலை, இனந்தெரியாதவர்களினால் சில பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டன. (க)

### யாழ். ஐ. வி. சங்கம்: உண்ணுவிரதமிருக்க தொழிலாளர் தீர்மானம்!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் வேலையிழக்கும் தொழிலாளர்கள் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் இம்மாதம் 10-ம் திகதி முதல் உண்ணுவிரதமிருக்கத் தீர்மானித்துள்ளனர்.

இந்தஉண்ணுவிரதம் தொடர்பாக, வேலையிழக்கவிருக்கும் தொழிலாளர்கள் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

''கடந்த சில மாதங்களாக தொடர்ந்து கொள்ளை, கொலை, வழிப்பறி, வாகனங்கள் கடத்தல், எரிபொருள் கொள்ளை,

(8-ம் பக்கம் பார்க்க)

### பாடசாலை வான் கடத்தல்

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரில் பாடசாலை வான் ஒன்று நேற்றுக்காலை இனந்தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டது.

ஒரு கல்லூரி வாசலில், பிள்ளைகள் இறக்கிவிடப்பட்ட பின்னர் அங்கு வந்த இனந்தெரியாதவர்கள், சாரதியை இறக்கிவிட்டு வானை எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது! (க)

### 'கலப்படத்திற்கு நாம் பொறுப்பல்ல'

(யாழ்ப்பாணம்)

''தண்ணீர் கலக்கப்பட்டிருந்தமை உண்மையே இது தற்போது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினுல் நீக்கப்பட்டு விட்டது. இக்கலப்படத்திற்கு யாழ். ப. நோ. கூ. சங்கம் பொறுப்பல்ல இதனை பெற்றோலியம் கூட்டுதாபனத்தார் ஏற்றுக் கொண்டனர்''

யாழ். ப நோ. கூ. சங்கத் தலைவர் திரு. ச. வேலாயுத பிள்ளை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பெற்றோல் விநியோகம் தொடர்பாக நேற்றைய 'ஈழநாடு' இதழில் வெளியான செய்தி தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதா

[8ம் பக்கம் பார்க்க]

### கொழும்பு புறப்பட்ட பஸ்கள் பத்திரமாக சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு நேற்றுக் காலை இரு தனியார் மினி பஸ்கள் சென்றன.

இந்த மினி பஸ்ஸில் பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்களும் காணப்பட்டனர்.

கொழும்பு செல்வதற்காக பெருந்தொகையானவர்கள், நேற்று தனியார் பஸ் நிறுவனங்களில் டிக்கட்டுகளைப்பதிவு செய்துகொண்டார்கள்.

இன்று சில தனியார்நிறுவன பஸ்கள் கொழும்பு செல்ல

(8-ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

Sisil Deep Freezer நல்ல நிலையில் உடன் விற்பனைக்கு உண்டு. 35, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 3666

தொல்புரம் வழக்கம்பரைக்கு அருகாமையில் இரண்டு பரப்பு வ வு பல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு திருவாதவூரர் மாஸ்டர் தொல்புரம் கிழக்கு, சுழிபுரம். 3667

பிடவைக் கடைக்கேற்ற கண்ணடி அலுமாரிகள் சோக்கேசுகள், ருக்குகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு; N K. சிவகாந்தராஜா. 48, 50, பெரிய கடை, யாழ்ப்பாணம். —T. P 22085. காலை 9—12-00 வரை பார்வையிடலாம். 3659

நல்ல நிலையிலுள்ள பாவித்த வீட்டுத்தளபாடங்கள் உடன் விற்பனைக்குண்டு. 9-6-85 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியிலிருந்து விற்பனை செய்யப்படும். விற்பனை இடம்: 176/1. பிரதான வீதி, (நொண்ஸ் ரெயிலர் கடை அருகாமையில்), யாழ்ப்பாணம். விபரங்கட்கு; S. ஜெயராசா, 117, டேவிட் வீதி, யாழ்ப்பாணம். 3658

## மணப்பந்தல்

யாழ். இந்து உயர்குல 26 வயதுடையவரும் அரசாங்க திணைக்களமொன்றில் தொழில்நுட்பவியலாளர் (Technician) ஆக கடமையாற்றும் நல்லொழுக்கம் உடைய மணமகனுக்கு, அழகும் பண்பும், கல்வியறிவும், நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் உள்ள 24 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. குடும்ப விபரம், சீதன விபரம், ஜாதகக் குறிப்பு, அண்மையில் எடுத்த புகைப்படம் என்பவற்றை அனுப்பிவைக்கவும். விபரங்களுக்கு: விளம்பர இல:- 3674 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3674

7ல் செவ்வாய் உள்ள கனடாவில் நல்ல வேலையில் இருக்கும் 34 வயதுடைய அழகும், தோற்றமுமுள்ள உயர் சைவ குலத்தைச் சேர்ந்த மகனுக்கு பெற்றோர் சகல அம்சமும் பொருந்திய மணமகளைத் தேடுகின்றனர். கனடா செல்ல விருப்பமும், அதற்கேற்ற வசதியும் சைவபோசனமும் உள்ளவர்கள் மாத்திரம் படத்துடன் மற்றைய விபரங்களையும் குறித்து அனுப்பவும். சகல தொடர்புகளும இரகசியமாக வைக்கப்படும். வளம்பர இல: 3668 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 3668

யாழ். இந்து உயர்குல 31 வயதுடையவரும் பிரான்ஸ் நாட்டில் கௌரவமான தொழில்புரியும், நல்லொழுக்கம் உடைய மணமகனுக்கு அழகும், பண்பும், கல்வியறிவும், நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் உள்ள 26 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. (பிரான்ஸ் சென்று திருமணம் செய்யக்கூடியவராக இருத்தல்வேண்டும்) குடும்பவிபரம், சீதன விபரம், ஜாதகக் குறிப்பு, அண்மையில் எடுத்த புகைப்படம் என்பவற்றை அனுப்பிவைக்கவும். விபரங்களுக்கு: விளம்பர இலக்கம்: 3673 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3673

## தேவை

Air Compressor 1¼'' out let valve இலிருந்து 1'0 P S I. அமுக்கமுள்ள காற்றைப் பெறக்கூடிய திறனுடைய எயர் கொம்பிறசர் ஒன்று உடனடியாகத் தேவைப்படுகிறது. மாரியம்மன் மோட்டர்ஸ், கோப்பாய் தெற்கு, கோப்பாய். 3663

மட்டக்களப்பு பெருந்தெருக்கள் திணைக்களத்தில் கடமையாற்றும் பொறியியலாளருடைய மருந்துப் பொட்டலம் Emuran களவாடப்பட்டுள்ளதால் அவர் உயிருக்கே ஆபத்தான நிலையிலுள்ளார். எனவே இம்மருந்தைப்பாவிப்பவர்கள், சிறிதளவு தந்துதவினல், திருப்பித்தரப்படும். க. சுந்தரலிங்கம் 140/10, நாலாம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம். 3678

## தேவை

வேப்பம் விதைகள் தொகையாகத் தேவை. தொடர்பு கொள்ளவும்: மில்க்வைற் யாழ்ப்பாணம். 3633

## வாடகைக்கு

கச்சேரி நல்லூர் ரோட்டில் (சென். பெனடிக்ற்ஸ் பாடசாலைக்கு முன்னிலையில்) சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: டி ஆர். பொன்னையா, 183, கச்சேரி, நல்லூர் ரோட், யாழ்ப்பாணம். 3672

## இலவச ஆலோசனை

உங்கள் வியாதி இன்னும் தீரவில்லை என்ற கவலையா? இளம்பிள்ளை வாதம், வாதம், மூலம், ஆஸ்மா, வலிகள், கட்டி கழலை, பெரும்பாடு, வெள்ளை, உடல் மெலிவு. ஸ்கலிதம், நீரிழிவு, வயிற்றுப் புண். மலடு எந்த வியாதியாளுலும் பரம்பரை சித்த ஆயுள்வேதமுறைப்படி ஆலோசனை பெறலாம். நேரிலும் சந்திக்கலாம் விபரங்கட்கு:- Dr. N. எமிலியானூஸ், அன்ரனி டிஸ்பென்சறி, ஆஸ்பத்திரி வீதி, புங்குடுதீவு. 3615

## புதிய வெளியீடுகள்

நல்லூர் வீடியோ சென்ரர்,
முத்திரைச் சந்தை, நல்லூர்.

மீண்டும் ஒரு காதல் கதை.
பிரதாப், ராதிகா (PYRAMID)
அம்பிகை நேரில் வந்தாள்.
மோகன், ராதா. (PYRAMID)
ஜனவரி 1.
விஜயகாந், சுலக்சன. (PYRAMID)

மூலப் பிரதிகளிலிருந்து பதிவு செய்த பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம். 3665

## HOME FINANCE LTD

ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
யாழ்ப்பாணம்

பூகொடை ஆலையில் தயாரித்த நவீன ரக

சீத்தை – பப்லின் – பிசாமா

போன்ற பலரக துணிவகைகள் எங்களிடம் மொத்த விற்பனைக்கு உண்டு. சகாய விலை: விரும்பியோர் உடனே வந்து பார்வையிட்டு தெரிவு செய்யவும்.

NO: 82, KANNATHIDDY ROAD, JAFFNA

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி

உயர்திரு. நாகமுத்து செல்லையா
(இளைப்பாறிய போஸ்ட் மாஸ்டர் மானிப்பாய்)

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே! அன்புத் தெய்வமே! காலமெல்லாம் எங்களைக் கண்ணின் இமை போல் காத்தருளிய எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஈராண்டு ஆகிவிட்டது. எத்தனை ஆண்டு ஆனாலும் என்ன; உங்கள் அன்புத் திருவுருவம் எங்கள் இதயங்களைவிட்டு அகலாது பப்பா. உள்ளத்தில் நாம் போற்றும் கோயில் ஒன்று உண்டென்று சொல்லின் அது நீங்களன்றி வேறில்லைப் பப்பா. ஊரார் போற்ற, உற்றார் வாழ்த்த, உத்தமராய் நேர்மைக்கோர் கண்ணியனுய் சமூகத்தின் மத்தியில் நன் மதிப்புப் பெற்று, எம்மையெல்லாம் அன்பினுல் சுமைதாங்கியாய் சுமந்து, இன்று சிறகிழந்த பறவையாய்த் தவிக்கவிட்டுச் சென்ற எங்கள் ஆசைப் பப்பா! எங்கள் இதய மலர்க் கோயிலிலே நித்திய நினை-விளங்கும் அகல் விளக்காய் இருப்பீர்கள் பப்பா! உங்கள் அன்பும் பண்பும் பாசமும் நிறைந்த புன்னகை தவழும் திருமுகம் எங்கள் கண்முன் தோன்றியபடியே இருக்கின்றது. உங்கள் புன்னகை தவழும் பொன் முகத்தை இனி எங்கு காண்போம்? நீங்கள் தெய்வமாக இருந்து ஒவ்வொரு நிமிஷமும் எங்களைச் சரியான பாதையில் வழிநடத்தி உங்களின் சரியான தீர்மானங்களை எடுத்து உறுதியாக அவற்றை நடைமுறைப்படுத்தும் திறனை எமக்குத் தந்தருளுமாறும் இறைஞ்சிக் கேட்டு உங்கள் அன்பான பொற்பாதத்தில் எங்கள் அன்பு மலர்களை வைத்து வணங்கி, எல்லாம் வல்ல இறைவனை உங்கள் ஆத்மா சாந்தியடையும் வண்ணம் பிரார்த்திக்கும்—

உங்கள் அன்பு மனைவி, பிள்ளைகள்.
மருமகள், பேரப்பிள்ளைகள்.
(3629)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர்
குழந்தைவேலு இராசகோபால்

மலர்வு: 14-1-1959
ஆளுபவன் பறிப்பு:
9-5-1985



அன்புடனும் பாசத்துடனும் வழ்ந்து எம்மை ஆருத்துயரிலாழ்த்தி திடீரென எம்மை விட்டுப் பிரிந்தாலும் உமது நினைவு என்றும் எம்மை விட்டு நீங்காது. உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

தங்கராசா குடும்பத்தினர்,
ஐயா, ஆச்சி, சக ஊழியர்கள்.
சந்தை வீதி, உடுப்பிட்டி. 3662

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தங்கராசா புவேந்திரராஜா (ராசன்)

படைப்பு: 22-12-1965
பறிப்பு: 09-05-1985



பண்பாளனுய், நல்லவனுய் பார் போற்ற வாழ்ந்த ராசன்!
கைகூப்பி வணங்கிய பொழுதும் உனக்கு ஏற்பட்ட கோர முடிவை எண்ணித் தவிக்கின்ருேம். உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அஞ்சலி செலுத்துகின்ருேம்.

பிரிவால் வாடும்: தாய்,
சகோதரி, பேரன், உறவினர்கள், நண்பர்கள்.
சந்தை வீதி, உடுப்பிட்டி. 3657

## 31-ம் நாள் நினைவஞ்சலி

ந. அம்பிகாபதி நந்தகுமாரன்

அன்னை மடியில்:
1967-04-15

ஆள்பவன் அழிப்பு:
1985-05-09




நந்தா! நீ போயினையோ! நாம் கலங்கி அழுகின்ருேம். பள்ளிப்படிப்பு முடித்து பட்டம் பெற முன்னே உன்னைக் கவர்ந்த யமராசா உலகத்தில் கொடியவனே. கொடியவர்கள் வாழ்கின்ற பூமியிலே கொடுமைக்குப் பஞ்சமில்லை என் மகனே- அந்த கொடுமையிலே சிக்கி உயிர் துறந்தனையோ கொதிக்குதடா உன்னைப் பெற்ற என் வயிறு.

அம்மா, அப்பா. உறவினர்.
சந்தை வீதி, உடுப்பிட்டி. 3627

## 31-ம் நாள் நினைவஞ்சலி

து. ரவீந்திரராஜா
[ராஜன்]



தோற்றம்:
24–02–1961

ஆளுபவன்
எடுத்ததேதி:
09–05–1985

அன்புடனும், பாசத்துடனும், வாழ்ந்து எங்கள், குடும்பத்தில் ஒளிவிளக்காக விளங்கி எம்மை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு திடீரென அணைந்து விட்டாயே! எங்கள அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
என்றென்றும் பிரார்த்திப்போம்
உங்கள் பிரிவால் துன்புறும்:
அன்புத்தாய், அன்புத்தந்தை, சகோதரர், சகோதரிமார், மைத்துனர். மருமகள், பேத்திமார் மற்றும் மாமன்மார், உற்ருர், உறவினர், நண்பர்கள்
சந்தை வீதி, உடுப்பிட்டி. 3661

## வெளிநாடுகளில் விளையாட பிரிட்டன் உதைபந்தாட்ட

# கழகங்களுக்குத் தடை!

### சர்வதேச உதைபந்தாட்டச் சங்கம் முடிவு!!

லண்டன், ஜூன் 7

**உலகில் எந்த ஒரு நாட்டிலும் உதைபந்தாட்டங்களில் கலந்துகொள்வதற்கு பிரிட்டனின் உதைபந்தாட்டக் கழகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் பிரஸல்ஸில் இடம்பெற்ற உதைபந்தாட்ட ஆதரவாளர்களுக்கிடையிலான வன்முறைகளையடுத்தே இத் தடை விதிக்கப்பட்டது.**

ஐரோப்பிய கிண்ணத்துக்கான இறுதியாட்டம் பெல்ஜியத்தின் பிரஸல்ஸ் நகரில் கடந்த வாரம் இடம்பெற்றது. அப்போது அங்கு விளையாட்டரங்கில் இடம்பெற்ற வன்முறைகளில் சுமார் 38 உதைபந்தாட்ட ரசிகர்கள் கொல்லப்பட்டனர்.

இச் சம்பவத்தையடுத்தே மேற்கண்ட தடை சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் பிரிட்டிஷ் விளையாட்டுக் கழகங்கள் மீது விதிக்கப்பட்டது.

பிரஸல்ஸில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பிரிட்டனின் 'லிவர்பூல்' கழகமும் இத்தாலிய அணியொன்றுமே கலந்துகொண்டன.

இந்த இறுதியாட்டத்தில் இத்தாலிய அணி வெற்றிகொண்டது. இதனையடுத்து 'லிவர்பூல்' கழக ஆதரவாளர்கள் வன்முறைகளில் இறங்கியதையடுத்தே 38 பேர் கொல்லப்பட்டனர். அவ் விளையாட்டரங்கின் சுவரொன்றும் இடிந்து வீழ்ந்தது.

இச் சம்பவத்தையடுத்து பிரிட்டிஷ் உதைபந்தாட்டக் கழகங்கள் சர்வதேசரீதியில் கடும் எதிர்ப்புக்குள்ளாகின.

ஐரோப்பிய விளையாட்டுச் சங்கமும் பிரிட்டிஷ் அணிகளை ஐரோப்பாவில் போட்டிகளில் கலந்துகொள்ளத் தடைவிதித்தது.

சர்வதேச உதைபந்தாட்ட சங்கத்தின் பிரிட்டன் கழகங்கள் மீதான இத் தடை இந்நாட்டின் தேசிய கழகத்தை எவ்வகையிலும் பாதிக்கமாட்டாது. இதுதவிர பிரிட்டனின் சுயாட்சிபெற்ற வேல்ஸ், ஸ்கொட்லண்ட் உட்பட வட அயர்லாந்து உதைபந்தாட்ட அணிகளையும் இத்தடை வெளிநாட்டு உதைபந்தாட்டங்களிலிருந்து தடைசெய்யாதுஎன்று அறிவிக்கப்பட்டது. [கி]

---

## தமிழ்ப்போராளிகள் குறித்து

# தமிழக அரசுடன் இந்திய அரசு எதுவும் பேசவில்லை!!

### சென்னையில் 'அமிர்' அறிக்கை

சென்னை, ஜூன் 7

'தமிழ் பேராளிகளின் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடச்செய்யுமாறு இந்திய மத்திய அரசு தமிழக அரசைக் கோரவில்லை'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் திரு அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

'ரஜீவ்-ஜே. ஆர்.' சந்திப்பு குறித்து சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

திரு அமிர்தலிங்கம் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது: ''தமிழ்ப் பகுதிகளிலிருந்து பாதுகாப்புப் படைகளை வாபஸ்பெறும் அறிகுறிகள் இலங்கை அரசிடம் காணப்படவில்லை.

இந்நிலையில் இந்தியாஇலங்கை தமிழ்ப் போராளிகளிடம் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடும்படி கோருவதில் இணங்கியுள்ளது என்ற எண்ணத்தை உருவாக்கும் வகையிலேயே மேற்கண்ட பிரசாரம் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம்.''

இலங்கை அரசு சிங்கள பொதுமக்களையும், ஆயுதப் படைகளையும், தமிழ் மக்களுக்கெதிராக ஆயுதங்களை ஏந்துவதைக் கைவிடச்செய்ய வேண்டும்.

இலங்கையில் தமிழ்ப் பகுதிகளில் 20 ஆண்டுகளுக்குமுன்னரே இராணுவம் குவிக்கப்பட்டுவிட்டது. தமிழ்ப் போராளிகள் ஆயுதங்களை ஏந்தமுன்னரே தமிழர்கள்மீது வன்முறைகள் கட்டவிழ்க்கப்பட்டு விட்டன.

கடந்தவாரம் புதுடில்லியில் இடம்பெற்ற ஜே. ஆர். ரஜீவ்' சந்திப்பையடுத்து தமிழ்ப் போராளிகளின் போராட்டம் குறித்து தமிழக அரசுடன் இந்திய மத்திய அரசு எந்தவித பேச்சுக்களையோ அல்லது வேண்டுதல்களையோ விடுக்கவில்லை. (கி)

---

## வவனியாவில் இ. தொ. க. காரியாலயம் செயல்படுகிறது

[வவனியா]

சில மாதங்களுக்குமுன் தீக்கிரையாக்கப்பட்ட வட பிராந்திய இ. தொ. கா. காரியாலயம் மீண்டும் பழையஇடத்தில் இயங்கஆரம்பித்துள்ளது.

வவனியா கடைவீதியில் குறித்த காரியாலயம் அமைந்துள்ளது. பொதுமக்கள் பழைய முகவரியுடன் தொடர்புகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வட பிராந்திய இ. தொ. கா. பொறுப்பதிகாரியும், பொதுசன தொடர்பு அதிகாரியுமான திரு பி. மதுரப்பிள்ளை இந்த காரியாலயத்தில் இருந்து செயல்ப்படுகிறுர்.

---

## பாரிஸ் 'ஈபெல்' கோபுர சுற்றுடலில் இந்திய விழா!

### பிரதமர் ரஜீவுக்கு பலத்த பாதுகாப்பு

பாரிஸ், ஜூன் 7

பிரான்ஸில் பாரிஸ் நகரம் 'இந்திய விழாவை' முன்னிட்டு விழாக்கோலம் பூண்டுள்ளது.

உலக அதிசயங்களில் ஒன்றான பாரிஸின் 'ஈபெல்' உருக்குக் கோபுரச் சுற்றுடலில் உள்ள 'ரொக்கதேரோ' என்ற இடத்திலேயே 'இந்திய விழா' இடம்பெறுகின்றது.

பிரெஞ்சு அதிபர் மித்தரோன், இந்தியப் பிரதமர் ரஜீவ்காந்தி ஆகிய இருவரும் இவ்விழாவைக் கூட்டாக ஆரம்பித்துவைக்கின்றனர்.

'ஈபெல்' கோபுரச் சுற்றுடலில் கடந்த சில தினங்களாக இந்திய வாசனையே வீசிவருகின்றது. இந்திய கலாச்சாரம், பண்பாடு, கலையம்சங்கள் மற்றும் நவஇந்தியாவின் தொழில் வளர்ச்சிகள், தொழில்நுட்ப சாதனைகள் என்பனவற்றைச் சித்தரிக்கும் வகையில் இந்த விழா ஏற்பாடாகியுள்ளது

வெளிநாடொன்றின் விழாவுக்கு பிரான்ஸின் உலக முக்கியத்துவம் வாய்ந்த 'ஈபெல்' சுற்றுடலில் முக்கியமளித்திருப்பது இதுவே முதல் தடவையாகும.

இது இவ்வாறிருக்க நேற்று பிரான்ஸ் வந்திருந்த இந்தியப் பிரதமருக்கு பலத்த பாதுகாப்புடன் கூடிய குதூகல வரவேற்பளிக்கப்பட்டது

திரு. காந்தி பயணம்செய்த பிரான்ஸ் வீதிகள், மற்றும் பார்வையிட்ட இடங்கள் அனைத்திலும் மாடிக்கட்டிடங்களில் குறிபார்த்துச் சுடும் துப்பாக்கி வீரர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர்.

சுமார் 200 பாதுகாப்பதிகாரிகள் பாதுகாப்பு வேலைகளில் ஈடுபட்டனர். இவர்களுடன் மறைவிடங்களில் குண்டுகளைக் கண்டுபிடிக்கும் நிபுணர்கள், மோப்பம்பிடிக்கும் பொலிஸ் நாய்கள் என்பனவும் சேவையிலீடுபடுத்தப்பட்டன,

'இந்திய பொற்கோயிலில்' சீக்கிய தீவிரவாதிகளை முறியடித்த முதலாவது ஆண்டு கடந்த 6ம் திகதி பூர்த்தியாயிற்று.

இத் தினத்தில் சீக்கிய தீவிரவாதிகள் ரஜீவ் மீது கொலை முயற்சிகளை மேற்கொள்ளலாமெனக் கருதியே அவருக்கு பலத்த பாதுகாப்பளிக்கப்பட்டிருந்தது. (கி)

---

## வான் கடத்தல்

[யாழ்ப்பாணம்]

நேற்று முன்தினம் பிற்பகல் இரு வாகனங்கள் கடத்தல் சம்பவம் இடம் பெற்றுள்ளது

ப நோ. கூ. ச. வுக்குச் சொந்தமான லொறி ஒன்றும் வர்த்தகரின் வான் ஒன்றும் இனந்தெரியாத நபர்களினுல் கடத்திச் செல்லப்பட்டவையாகும். [மா]

---

## 15 நாள் சிறை

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்கள்படும் இன்னல்களைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்திய 1,100 தி. மு. க. தொண்டர்களுக்கு மதுரை நீதிமன்றம் 15 நாள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

மேற்குறிப்பிட்ட தி. மு. க. தொண்டர்கள் கைதுசெய்யப்பட்ட தினம் முதல் றிமாண்டில் இருந்ததால் அவர்கள் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். (இ மா]

---

## ★ தமிழ் இளைஞர் ரவீந்திரன் விவகாரம்:

# பிரிட்டன் உள்துறை அமைச்சர் கவலை

(லண்டன்)

இலங்கைத் தமிழ் இளைஞர் ரவீந்திரன் லண்டனிலிருந்து திருப்பியனுப்பப் பட்டிருப்பது குறித்து பிரிட்டனின் வெளியுறவு அமைச்சர் லியோன் பிரிட்டான் கவலை தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து இங்கிலாந்துக்கு அகதிகளாக வந்துள்ள நூற்றுக்கணக்கான தமிழர்களில் ரவீந்திரனும் ஒருவராவார்.

இலங்கையில் இவரது பாதிப்புக்கள் குறித்து 'விஸா'வழங்குவதற்குமுன்னர் குடியகல்வு குடிவரவுப் பகுதியினருக்கு உதவும் வகையில் குழுவொன்று பிரிட்டிஷ் உள்துறை அமைச்சினுல் நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் ரவீந்திரனிடம் விசாரணை மேற்கொண்டு அவருக்கு விஸா வழங்கும்படி உள்துறை அமைச்சுக்குசிபார்சு செய்திருந்தனர். ஆனுல் அவர் அதற்கு முன்னரே பிரிட்டனிலிருந்து திருப்பியனுப்பப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை அகதிகள் பிரச்னையைக்கையாளும் பிரிட்டிஷ் அதிகாரிகளிடையே போதியளவு தொடர்பில்லாதிருந்ததாலேயே ரவீந்திரனுக்கு இக்கதி நேர்ந்துள்ளதென பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது

இலங்கையிலிருந்துவரும் அகதிகள் தகுந்த காரணங்களை தெரிவிக்காதவிடத்து அவர்களை மீண்டும் தாயகம் அனுப்பும் உள்துறை அமைச்சின் நிலையைத் தாம் ஏற்றுக்கொள்வதாகவும், ஆனுல் தனிப்பட்ட வகையில் ஒவ்வொருவரையும் தீரவிசாரிக்காது அவசர முடிவுகளை எடுப்பதைதாம் கண்டிப்பதாகவும் அமைச்சர் லியோன் பிரிட்டான் எச்சரித்துள்ளார்.

ரவீந்திரனைத் தேடிக்கண்டுபிடித்து மீண்டும் அவரை பிரிட்டனுக்கு அனுப்பும்படி உள்துறை அமைச்சு இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகராலயத்தைக் கேட்டுள்ளது

அவருக்கு இலவச பயணச் சீட்டையும் விஸாவையும் வழங்க அவ்வமைச்சு முன்வந்துள்ளது. (கி)

---

## தேர்த்திருவிழா

[யாழ்ப்பாணம்]

அச்சுவேலி காட்டுமலை அருள்மிகு கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவ தேர்த் திருவிழா இம்மாதம் 16-ம் திகதியும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன.

---

## துப்பாக்கிச் சூட்டில் லொறிச்சாரதி பலி

(யாழ்ப்பாணம்)

மதவாச்சிக்கு அண்மையில் தவசிமலைப்பகுதிஊடாக வந்துகொண்டிருந்த லொறி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில் சாரதியான செனிவரத்தின என்பவர் பலியானதாகக் கூறப்படுகின்றது. கிளீனரான செல்லத்துரை என்பவர் சிறுகாயங்களுடன் காட்டுக்குள் பாய்ந்து தப்பித்துக் கொண்டாராம்.

கொழும்பிலிருந்து புறப்பட்ட இந்தலொறி இருதினங்களுக்குமுன் வவனியா வந்துகொண்டிருந்தபோது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. வவனியாவிலுள்ள தமிழர் ஒருவருக்கு இந்த லொறி சொந்தமானது. (மா)

---

## நாவலர் வித்தியாலய அ. பி. சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் நாவலர் இ. த. க. வித்தியாலய அபிவிருத்திச் சபைக் கூட்டம், வித்தியாலய மண்டபத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை பகல் ஒருமணியளவில் நடைபெறும்.

அதிபர் திருமதி க. ஜெயராசா தலைமையில் நடைபெறும் மேற்படிக் கூட்டத்தில் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்கள். புதிய நிர்வாகிகள் தெரிவும் நடைபெறும்.

---

## இத்தாலியில் 'மாபியா' பயங்கரவாதிகள் கைது!

ரோம், ஜூன்7

இத்தாலியில் நேற்றுமுன்தினம் பெருமளவில் 'மாபியா' பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

மிலான் நகரில் திடீரென இத்தாலியப் பொலிஸார் சோதனைகளை மேற்கொண்டனர். இந்நகர் சுற்றி வளைக்கப்பட்டு சுமார் 200 வீடுகள் வரை சோதனையிடப்பட்டன. இச்சோதனையின் போதே 'மாபியா' பயங்கரவாதிகள் பலர் கைதானுர்கள்.

இப்பயங்கரவாதிகளில் பலர் சர்வதேச ரீதியில் கொலை, மற்றும் குண்டு வைப்புச்சம்பவங்கள் தொடர்பாக தேடப்பட்டுவந்தனர்.

இவர்களிடம் போதைப் பொருட்கள், ஆயுதங்கள், மற்றும் பயங்கர அழிவுச் சாதனங்கள் என்பன இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டன. (கி)

## மணிவாக்கு

பழிக்குப்பழி வாங்கும் தன்மையுடையவன் பகைவனுக்கு நிகராகிறான்; அதனை மன்னிக்கும் பண்புடைவன் பகைவனிலும் பன்மடங்கு மேலோனாகிறான்.

— பிரான்சிஸ்பேக்கன்.

# நமது நோக்கு

## கனகமுலை தந்தாளின் நினைவுக்கு நிதியம்

முற்றுந்துறந்த பட்டினத்தடிகள் தாய்ப்பாசத்தை துறக்கமுடியவில்லை என்பதை தாயாரின் மறைவில் பாடிய பாட்டுக்கள் உணர்த்துகின்றன.

அப் பாடல் ஒன்றில் ''கைப்புறத்திலேந்திக்கனகமுலை தந்தாளை எப்பிறப்பிற் காண்பேன் இனி'' என்ற அடிகள் காணப்படுகின்றன

கனகமுலை என்ற சொற்தொடருக்கு ஆராய்ச்சியாளர் என்ன கருத்து வழங்குகிறார்கள் என்பதை நாமறியோம்.

கனகம் பொன் என்பதால் பொன்முலைக்கு கற்பனைக்கெட்டியவாறு பொருள் சொல்லலாம்; மஞ்சள் அல்ல என்பது மட்டும் நிச்சயம்.

விஞ்ஞான உலகில் நாம் வாழ்வதால் விஞ்ஞான, மருத்துவ ஆராய்ச்சிக்கு பெருமதிப்புண்டு.

மருத்துவ ஆராய்ச்சியின் படி தாயின் கருப்பத்திலேயே குழந்தையின் ஆரோக்கியம் பெருமளவுக்குநிர்ணயிக்கப்படுகிறது.

கற்பமாகி இரண்டாவது மூன்றுவது மாதங்களில் தாய்க்கு சத்துணவு மிக அவசியம்; இன்றேல் குழந்தையின் எதிர்காலம் பாதிக்கப்படுகிறது.

இன்று இந்தக் குறைபாடு மூன்றும் உலக நாடுகளில் காணப்படுகிறது.

பட்டினத்தார் வாழ்ந்த காலத்தில் மருத்துவம் இத்துணை மேலோங்கி இருக்கவில்லை. உலகமும் ஒன்று, இரண்டு, மூன்று என்று கூறுபோடப்படவில்லை.

அது என்னவானாலும், துறவு ஒருபுறம்; பட்டினத்தாரின் பாடல்களில் இருக்கும் புலமை, தாயின் வயிற்றிலே ஆரம்பமானதென்பதற்குத் தடையில்லை

கனகமுலை என்றால் என்ன என்பது இன்று மருத்துவ ஆராய்ச்சி குறிப்பிடும் முடிவுக்கு வழிகாட்டுகிறது.

தாய்ப்பாலில்லாமல், தாய்ப்பாலில் போஷாக்கில்லாமல் மாண்டுமடிவதோடு, குறுறு உயிரிலும் குறைபாடுகள் கொண்ட பல குழந்தைகள் தங்கள் வருங்காலத்தில் வலது குறைந்தவர்களாகக் காணப்படுவது இன்று உலகில் அதிகரித்திருக்கும் காட்சி.

'தாய்-சேய் நலச்சங்கங்கள்' எங்கும் உருவாகின்றன; பெரும்பாலும் அரச உதவியுடன் இயங்கும் இச்சங்கங்கள் தங்களாலியன்ற பணியைச் செய்கின்றன.

அரசாங்க அனுசரணை மட்டும் போதாதென்று உணர்ந்த பெரியவர்களில் இதற்கு உதவ முன்வந்திருக்கும் டாக்டர் குருசெற் தம்பையா தாயின் பெயரால் ''பாக்கியம் குருசெற் நம்பிக்கை நிதியம்'' தொடங்கியிருப்பதை எங்கள் பத்திரிகை வாசகர்கள் நன்கறிவார்கள்.

டாக்டர் தம்பையாதமது 87-வது வயதில் இந்த நற்பணியை ஆரம்பித்திருப்பது பணம்படைத்த பல வயோதிபருக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

யாழ்ப்பாணத்தில் எந்த நிலையிலும் திருமண, மயான வைபவங்கள் பெருஞ்செலவில் நடைபெறுவது சாதாரணம்; இவற்றைக் கண்டிப்பது அறிவீனமாகும்; இந்த வைபவங்கள், ஆலயவிழாக்கள் போல சமூகத்தின் ஒருமைப்பாட்டைப் பலப்படுத்துகின்றன.

ஆனால் இன்று இவ்வித செலவினங்கள் நன்றாகக் குறைக்கப்பட வேண்டும். பணத்தில் பெரும்பகுதி இவ்வித நிதியம் போன்ற அறிவு வளர்ச்சித் திட்டங்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

பரோபகாரம் தமிழ்மக்களுக்கு ஒரு புதுமையான பண்டம் அல்ல; இன்று இத்துறையில்தானும் ஒரு விழுக்காடு ஏற்பட்டிருக்கிறது.

கண்டதே காட்சிகொண்டதே கோலம் என்றபாங்கில் நடப்போர் தொகை அளவுக்கும் மிஞ்சிவிட்டது.

பணம் மட்டும்போதாது. டாக்டர் தம்பையா சுட்டிக்காட்டியதுபோல் சமூகநலத்துக்கு அர்ப்பணம் என்பதும் அதே அளவு அவசியம்.

தமிழகத்தில் மாணவர் இலவச மதியபோசனத்தை பாரதம் முழுதிலும் மிகத் திறமையாக நடத்திய காங்கிரஸ் தலைவர் காமராஜர் என்பதைப் பிரதமர் நேரு வியப்புடன் அடிக்கடி குறிப்பிட்டார்; மற்றைய மாநில அமைச்சர்கள் தமிழகம் சென்று அதனை நேரில் பார்க்க வேண்டுமென்று கோரியிருந்தார்,

இன்று ஆந்திரா மாநிலத்தில் இவ்வித திட்டம், நடைமுறையில் ஊழல் இடம் பெற்றதால் கைவிடப்பட வேண்டியிருக்கிறது என்கிறார் அந்த மாநில முதலமைச்சர் என். ரி. ராமராவ்.

அரசதிட்டம் எதுவிலும் களிம்பு செம்பைத் தாக்குவதுபோல் ஊழல் ஒட்டிக் கொள்ளும். அதற்காக மாணவர்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் மதியபோசனம் நிறுத்தப்படுவதை அகில இந்தியாவுமே கண்டித்திருக்கிறது.

டாக்டர் தம்பையா குறிப்பிடும் நிதியம் பட்டினத்தார் குறிப்பிடும் கனகமுலைக்குப் பொருத்தமாகவும் தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லையென்பதையும் நினைவுறுத்துகிறது.

### கப்பலில் வருகின்றன

[கொழும்பு]

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு 950 மெற்றிக்தொன் அரிசியும், 950 மெற்றிக்தொன் சீனியும், 950 மெற்றிக்தொன் மாவும் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்தில், இந்த உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படும். (க)

# அதிபர்கள் மாணவர்கள் ஆகிறார்கள்!

## யாழ். கல்வித் திணைக்களம் நடத்திய சேவைக்கால வகுப்பு

'கல்வியாளனுக்கு எல்லா நாடும் அவன் நாடாகும், எல்லா ஊரும் அவன் ஊரே. அவ்வாறிருக்க ஒருவன் கல்லாதிருப்பது ஏன்?' என்ற கேள்வி திருவள்ளுவரால் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே எழுப்பப்பட்டது, பரந்த மனப்பான்மைபெற மட்டுமல்ல, தன்பணிகளைத் திறம்பட ஆற்றுவதற்கும் கல்வி அவசியமே என்பது தெளிவு. அதிலும் சிறப்பாக ஒரு சமுதாயத்தின் கல்வியை நெறிப்படுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டிருக்க வேண்டியது தவிர்க்கமுடியாததாகின்றது. மாறுகின்ற வாழ்விலட்சியங்களுக்கும் நோக்குகளுக்கும் இசைவாக்கம் செய்து கொண்டு எதிர்கால சமுதாயத்தை நன்முறையில் உருவாக்க வேண்டியவர்கள் ஆசிரியர்கள். அவர்களின் கடமைகளைச் சரியான வழியிலே செலுத்திக் கல்விப் பயன் பாட்டினைச் சேரிடமறிந்து சேர்த்திடும் பெரும் பொறுப்பு அதிபர்களுக்கு உண்டு.

இப்பொறுப்பினை அதிபர்களுக்கு நினைவூட்டவும் புதிய கல்வித் திட்டத்தினைச் செயற்படுத்த அவர்களைத் தகுதியுடையவர்களாக்கவும் யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களம் சென்ற மாதம் 30, 31-ம் திகதிகளிலும் இம்மாதம் 1-ம் திகதியும் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலே சேவைக்கால வகுப்பொன்றினை ஒழுங்கு செய்திருந்தமை முற்றிலும் பொருத்தமே. நல்லூர், யாழ்ப்பாணம், மானிப்பாய் ஆகிய கல்வி வட்டாரங்களில், முதலாம் ஆண்டு தொடக்கம் பதினோராம் ஆண்டுவரை வகுப்புகள் உள்ள பாடசாலை அதிபர்கள் இவ்வகுப்பிலே கலந்து கொண்டனர். கரும்பலகை, வெண்கட்டி, வரைபடங்கள் முதலிய உபகரணங்களுடன் கல்வியதிகாரிகள் ஆசிரியர்களாய் மாறி வகுப்புக்கள் நடத்தச் சராசரி நாற்பது வயதுக்கு மேற்பட்ட அதிபர்கள் அடக்க ஒடுக்கமாய் அமர்ந்திருந்து 'செவிவாயாக நெஞ்சு களனாகக் கேட்டவை கேட்டவை விடாதுளத்து அமைத்துக்' கொண்டது கண் கொள்ளாக் காட்சியாகும்.

தொகுப்பு

**சொக்கன்**

### பணிப்பாளர் கருத்துரை

கல்வித் திணைக்களப் பணிப்பாளர் திரு எம். சிமியாம்பிள்ளை சேவைக்கால வகுப்பினைத் தொடக்கி வைத்து உரையாற்றினார். ''பாடசாலை அதிபர்கள் இதுநாள்வரை நிர்வாகிகளாகவே தொழிற்பட்டார்கள். எதிர்காலத்தில் இவர்கள் தத்தம் பாடசாலைகளின் முகாமையாளராகப் பணிபுரிதல் வேண்டும். எனவே முகாமைத்துவம் என்றால் என்ன என்பதை விளங்கிக் கொண்டு தமது பணிகளை ஆற்றவேண்டியது அவசியம். அதிகாரப் பண்முகமாக்கல் காரணமாகக் கூடிய பொறுப்புக்கள் அதிபர்களுக்கு வழங்கப்படவுள்ளன. அவற்றை சிறந்த முறையிலே பயன் செய்து நல்லதொரு கல்விப் பரம்பரையினை உருவாக்கும் கடமை அதிபர்களைச் சார்ந்ததாகும்.'' என்றார் அவர்.

கல்வியதிகாரியும், அவுஸ்திரேலியாவில் கல்வி முகாமைத்துவப் பயிற்சி பெற்றவருமான

(5-ம் பக்கம் பார்க்க)

ஒல்லாந்தில்——————

## தமிழ் அகதிகள் நிலையும் அரசு நடவடிக்கையும்

**எஸ். உமாகாந்தன்**

இலங்கையின் அரைவாசிப் பரப்பை உடைய ஒல்லாந்து சுமார் 140 லட்சம் மக்கள் தொகையைக் கொண்டதாகும். இந்நாட்டின் சில பகுதிகள் கடல்மட்டத்திற்குக் கீழே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. கடல்நீர் நாட்டினுள் புகுந்துவிடாமல் இருக்க பெரும் மதிற்சுவர்களால் அணைபோடப்பட்டுள்ளது. செழிப்பான பூமியும் அதனை ஊடறுத்துச் செல்லும் கால்வாய்களும் இங்கு கால்நடை வளர்ப்புத் தொழில் வளர பேருதவியாக அமைந்துள்ளன. ஒல்லாந்தின் பாற்பொருட்கள் உலகெங்கும் பிரசித்தமானவை.

ஒல்லாந்தில், இலங்கையில் இருந்து சென்ற தமிழ் அகதிகள் சுமார் 3,500 பேர் இன்று இருப்பதாகக் கூறப்படுகிறது. இவர்கள் அந்தநாட்டில் அரசியல் தஞ்சம்கோரி உள்ளனர்.

நெதர்லாந்து வானொலியில் அண்மையில் இப்பிரச்னை அலசி ஆராயப்பட்டபோது இப்பிரச்னை தொடர்பாகப் பலரும் கருத்து வெளியிட சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது நிகழ்ச்சியைத் தயாரித்து ளித்த திரு. பீற்மயர்ஸ் என்பவர் தமது அறிமுக உரையில், இலங்கையில் தற்போதுள்ள நிலைமைபற்றிச் சுருக்கமாக எடுத்துக் கூறினார்.

இந்நாட்டில் இரு இனங்கள் 2000 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகின்றபோதிலும் தற்போதுள்ள நிலை தோன்றியதற்கு 1948ம் ஆண்டுக்குமுன்னரும் பின்னரும் இருந்த நிலைமையை அவதானிக்க வேண்டும் என அவர் கூறினார்.

1948ம் ஆண்டுக்கு முன்னர் இருந்த பிரிட்டிஷ் ஆட்சியின் போது தமிழர்கள் பல சலுகைகளை அனுபவித்து வந்தனரென்றும், ஆனால் 1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தபின் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் தமது மொழியையும் கலாசாரத்தையும் முன்னேற்றுவதற்கு எடுத்த நடவடிக்கைகள் தமிழரைப் பின்தள்ளிவிட்டன என்றும் அவர் கூறினார் தற்போது பிரச்னைகள் வளர்ந்துவிட்ட காரணத்தால் தமிழர்களின் தனிநாடு கோரிக்கை சிங்கள மக்களுக்கு சிவப்புக் கொடியாக அமைந்துவிட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் வன்முறை தலைநூக்கியபோதும் இனக்கலவரம் இடம்பெற்றபோதும் டச்சு மக்கள் அதைப் பெரிது படுத்தவில்லை. வியட்னாம் யுத்தம், ஈரான்-ஈராக் போர் போல இதையும் தூரநாடொன்றில் நிகழும் வருந்தத்தக்க சம்பவமாகவே அவர்கள் கருதினர். ஆனால் தமிழ் அகதிகள் தமது நாட்டிற்குள் வரத் தொடங்கியபோது பிரச்னை தமது வாயிற்படிக்கு வந்து விட்டதை உணரத்தொடங்கினர்.

பிரச்னையின் ஆழத்தைக் கண்டறிய அரசாங்கம் ஒரு ஆணைக்குழுவை நியமித்தது ஒரி வைனன் (Vynan) என்ற உயர் நிர்வாக அதிகாரியைத் தலைவராகக் கொண்ட இந்த ஆணைக்குழு இலங்கைக்குவந்து பலரது கருத்துக்களைக் கேட்டறிந்தபின் ஒரு அறிக்கை தயாரித்து அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளது. இந்த அறிக்கை தற்போது பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ளது. சமூகநல நிறுவனங்கள், மனித உரிமை இயக்கங்கள் என்பனவற்றுடன் அரசியல்கட்சிகள் இந்த அறிக்கையைவன்மையாகக்கண்டித்துள்ளன காரணம் இந்த அறிகையிலுள்ள ஒரு அம்சம்தான். இலங்கை தென்பகுதித் தமிழர்கள் பயமின்றி வாழலாம். எனவே தஞ்சம் கோரி வந்தவர்களை தென் இலங்கைக்கு அனுப்பலாம்என அறிகையில் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் சார்பில் பேசிய ஜேம்ஸ் ஸிலிப் சவுஸ் என்பவர் இலங்கையில் திட்டமிடப்பட்ட இனப்படுகொலை நிகழவில்லை எனவும் வடக்கில் தமிழ்மக்கள் சிரமங்களை எதிர்நோககுகிறார்கள் என்பது சரிதான் எனினும் அவர்கள் தென்இலங்கையில் பாதுகாப்பாக வாழமுடியும் எனவும் கூறியிருக்கிறார். 1983ம் ஆண்டுக்குப் பின்னர் தென்இலங்கையில் தமிழருக்கெதிராக வன்முறை இடம்பெறவில்லை. ஆகவே இங்கு வந்துள்ள தமிழர்களை தென்இலங்கைக்கு அனுப்ப முடியும் எனக்கூறிய அவர்; அவர்கள் அவ்வாறு திரும்பிச் செல்லுமிடத்து அவர்களது புனர்வாழ்வுக்கு டச்சு அரசாங்கம் இலங்கை அரசாங்க நிறுவனங்களுக்கு ஊடாகப் பணஉதவி செய்ய தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார் ஒல்லாந்து இடதுசாரி எதிர்க்கட்சிகள் இந்த அறிக்கை ஏற்றுக்கொள்ளப் படக்கூடாது எனக் கூறுகின்

(7ம் பக்கம் பார்க்க)

## றமழான் சிந்தனை

நீங்கள் கொட்டும் அழுக்குகள், குப்பைகள் இவைகளைக் கொண்டு மண்ணிலே சிறு பிராணிகளை, புழுக்களை உண்டாக்கி மண்ணை வளப்படுத்தி முட்டை வடிவமான ஒரு பொருளை மண்ணிலே உண்டாக்கியவன் அல்லாஹ்! அப்பொருளை நீங்கள் ''புரொட்டீன்'' என்றல்லவா அழைக்கின்றீர்கள். இத்தாதுப் பொருட்கள் உங்கள் உடம்புக்கு அவசியம் அல்லவா! இவைகள் உங்களுக்கு தாவரம் என்னும் ஒரு தொழில்நிலையத்திலிருந்து கிடைக்கச் செய்கிறான்! உண்மையல்லவா!

பூமியிலுள்ள தண்ணீர், காற்றின் வாயுக்கள் இவைகளைக் கொண்டு தாவர வர்க்கத்திலிருந்து மாப்பொருளையும் கொழுப்பொருளையும், எண்ணைப் பொருளையும் உண்டாக்கி உங்கள் உடல் என்னும் இயந்திரத்தை இயங்கச்செய்பவன் யார்? வயல்களில், பாலைவனங்களில், காடுகளில், மலைகளில், ஆறு, குளம், கடல் இவைகளில் உங்களுக்கு வேண்டிய உணவுகளை தயார்செய்து உங்கள் வயிற்றை நிரப்புபவன் யார்? உங்களது முயற்சி வயலில் விதையை வீசி எறிவது! ஆனால் அதை முளைவிட்டு வளரச் செய்பவன் சக்தி பொருந்தியவன் யார்? அவன்தான் அண்ட சராசரங்களுக்கும் அரசனான அல்லாஹ்!

தொகுப்பு;

அ. க அக்பர் ஜின்னா

# அதிபர்கள், மாணவர்கள்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. க. கந்தசாமி முகாமைத்துவக் கோட்பாடுகள் பற்றித் தெளிவாக விளக்கி உரையாற்றினர். பாடசாலை முகாமைத்துவம் என்பதற்கு அவர் வழங்கிய வரைவிலக்கணம் குறிப்பிடத்தக்கது. "பாடசாலையிலே காணும் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர், கட்டடங்கள் தளபாடங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள், கற்றற்குதவு பொருள்கள், காணி, பணம், மாணவர்கள் ஆகியவற்றை எல்லாம் ஒன்றிணைத்து ஆசிரியரையும் ஏனைய ஊழியரையும் கொண்டு மாணவருக்கு இயன்றளவு சிறந்த முறையிலே கல்வியளிப்பதையே பாடசாலை முகாமைத்துவம் எனக் கூறுகிறோம்."

இவரின் வரைவிலக்கணத்தை நோக்கும் பொழுது அதிபரின் முகாமைத்துவத்தின் இருவேறு கூறுகள் எமக்குத் தோன்றாது போகமாட்டா. ஒரு கூறு கட்டடம் முதலான சடப்பொருள்கள் மற்றையகூறு ஆசிரியர், ஊழியர் முதலான உயிர்ப்பொருள்கள் இவ்விரண்டையும் இணைத்துக்கொண்டு 'மாணவர் என்ற மூலாதார உயிர்ப்பொருளில் வளர்ச்சியை உண்டாக்குவதின் பாரிய பொறுப்பு அதிபர்களுக்கே உண்டு என்பதை இவர் நன்கு பதியவைத்தார். பாடசாலை முகாமைத்துவம் என்பது வெறும் அதிகாரக் குவிவு அல்ல என்பதும் அது அதிகாரப் பன்முகப்படுத்தல் வாயிலாகக் குறித்த இலக்கினை அடைவதற்கான சிறந்தவழி என்பதும் கந்தசாமி அவர்களால் நன்கு தெளிவாக்கப்பட்டன.

வேலை செய்ய இயல்பான நாட்டம் உடைமையும் தாபன நோக்கங்களோடு சுயவிருப்பு வெறுப்புக்களை இணைக்கும் இயல்பும் தன்சொந்த உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யும்போது ஊக்குதலைப் பெறும் பண்பும், சுயசிந்தனைத் திறனும், தாபனப் பொறுப்புக்களை ஏற்கும் விருப்பும், கற்றல் கற்பனை என்பவற்றால் பிரச்சினைகளை விடுவிக்கும் வல்லமையும், சொந்தத் திறனை வளர்க்கும் நாட்டமும் உடைய ஊழியரை ஒன்றிணைத்து ஸ்தாபனத்தின் இலட்சியத்தை அடைவதே முகாமைத்துவத்தின் குறிக்கோள் என்பதைப் பல ஆதாரங்களோடு திறம்பட விளக்கி அதிபர்களின் நல்லுணர்வுகளைத் தூண்டிவிடுவதில், திரு. கந்தசாமி வெற்றிபெற்றார் என்றே கூறவேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்துப் பாடசாலை அதிபர்களிடையே தெரியப்பட்டு டெல்கி சென்று முகாமைத்துவப் பயிற்சிபெற்றுத்திரும்பிய திரு. அ பஞ்சலிங்கம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர்முகாமைத்துவப்பணிகள்பற்றியவகுப்பை நடத்திய இவர் அதிபர்களையும் தமது உரத்த சிந்தனையிலே கலந்துகொள்ளச் செய்துவிட்டார். ஆரோக்கியமான சூழ்நிலையில் ஒரு கலந்துரையாடலாகவே இவரின் வகுப்பு அமைந்ததைக் குறிப்பிட்டேயாகவேண்டும்.

"(அதிபர்களாகிய) நாம் எம்முடன் தொழில் புரிபவர்களை மரியாதையுடன் நடாத்தும் போது ஒரு நல்ல சூழல் உருவாகும் அச்சூழலில் அவர்கள் தடையின்றி உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியும்" என்ற கருத்தினை அதிபர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையிலே திரு. பஞ்சலிங்கம் நடைமுறை உதாரணங்களின் அடிப்படையில் விளக்கினர். உண்மையில் அதிபர்கள், தமது முகாமையில் பணிபுரிவோரின் உணர்ச்சிகளை மதித்து அவர்களுடன் கலந்துரையாடி ஏற்கத்தக்க நல்ல ஆலோசனைகளைச் செயற்படுத்துவதில் ஆர்வத்தோடு ஈடுபட்டால் பாடசாலைகளை போல மகிழ்ச்சியும் பயன்பாடும் உள்ள வேறுதாபனம் எதுவும் இருத்தல் இயலாது. சேவைக்கால வகுப்புக்களை நடத்திய அனைவருமே இவ்விஷயத்தை வற்புறுத்தியது குறிப்பிடத்தக்கது, சிறப்பாக இறுதி நாளன்று 'ஆசிரியரை ஊக்கப்படுத்துவதில் அதிபர்களின் பங்களிப்பு' என்ற பொருளில் உரையாற்றிய பிரதம கல்வியதிகாரி திரு. இ. சுந்தரலிங்கம் கூறியவை அதிபர்களின் கண்களைத் திறந்திருக்கும் என்பது உறுதி. "அதிபர்கள் நேர்மை உறுதி, நடுவுநிலை உடையவர்களாய்ப் பாடசாலைகளின் பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாப்பதிலே ஆர்வமுடையவர்களாய் இருத்தல் அவசியம். திறமையைக் கௌரவித்து, குறைபாடுகளைத் தண்டனை முறையாலன்றி அறிவுரை மூலமாகத் திருத்துவதே சிறந்தது. ஆசிரியர்களின் தேவைகளை அறிந்து நிவர்த்தி செய்வதால் அவர்களை ஊக்கி வேலைவாங்குவது எளிதாகும். சுருங்கச் சொன்னால் ஆசிரியர்களைத் தம்கீழ் ஊழியர்களாகக் கருதாது நண்பர்களாகக் கருதிச் சுமுக உறவுகளை ஏற்படுத்துவது அதிபர்களின் இன்றியமையாத கடனாகும்". கல்விப்பணிப்பாளர் சி மியாம்பிள்ளை தமது நிறைவுரையிலே அதிபர்களைத் தந்தையர்களாகவும் ஆசிரியர்களைத் தாய்மாராகவும் உவமித்தமையும் சிந்தனையைத் தூண்டுவதாய் இருந்தது.

பாடசாலைகளின் ஆவணங்களைப் பேணுதல், பொருட்களைப் பாதுகாத்தல், அவற்றின் பதிவுகளைச் சரிவரச் செய்தல், வசதிச் சேவைக் கட்டண வரவு செலவுகளை முறைபடப் பதிதல், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதிகளைப் பேணிக் கையாளும் வழிவகைகள் சம்பந்தமான விடயங்களில் பெரும்பாலான பாடசாலைகளிலே பல குறைகள் நிலவுவதாக எடுத்துக் காட்டப்பட்டது. அவற்றைச் சரிவரப் பேணும் முறைகள்பற்றிக் கல்வித் திணைக்கள நிருவாக அதிகாரி ஏ சந்திரராசா, கணக்காய்வாளர் திரு ஏ. ஜோசப்பு, வட்டாரக் கல்வியதிகாரி திரு கு. சோமசுந்தரம் ஆகியோரும் உரையாற்றினர்கள் பொதுப் பொருள்கள், நிதிகள் தொடர்பான அம்சங்களிலே அதிபர்களின் பொறுப்பனவும், பணிகளும் இவர்களின் பேச்சுக்களால் நன்கு தெளிவாயின. எதிர்காலத்தில் அதிபர்கள் இவ்விடயத்தில் மிகுந்த கவனம் செலுத்துவார்களென்று நம்பலாம்.

"ஒரு நிறுவனத்தில் சரியாக வேலை நடைபெற வேண்டுமாயின் அங்கு ஒரு திட்டம் இருத்தல்வேண்டும். இதேபோன்று பாடசாலைகளில் கற்பித்தலுக்கு நேரசூசி இன்றியமையாததாக அமைகிறது...... பாடசாலை வேலைநேரம் ஆறு மணித்தியாலங்களாக அமைகிறது இக்கால எல்லைக்குள் பலதரப்பட்ட பாடங்களைக் கற்பிக்கவேண்டிய கடப்பாடு ஆசிரியர்களுக்கு உரியதாகும் எனவே பாடசாலைகளிலுள்ள மாணவர்களையும் அவர்கள் கற்கும் வகுப்புக்களையும் கற்பிக்கப்படவேண்டிய பாடங்களையும் ஆசிரியர்களின் ஆற்றல்களையும் அளவிட்டு ஒரு நேரசூசியை அமைக்கும் பணியைக் கல்வித் திணைக்களம் அதிபருக்குக் குறித்தொதுக்கியுள்ளது" எனத் தொடங்கிப் பிரதம கல்வியதிகாரி திரு. வெ. சபாநாயகம் நேரசூசி அமைய வேண்டிய தன்மைபற்றி விளக்கினர். நேரசூசி தொடர்பான கல்வியமைச்சின் பல காலத்திய சுற்றுநிருபங்களை ஆதாரமாகக் கொண்டு இவரது உரையமைந்தது பயனுள்ள பல தகவல்களை உள்ளடக்கி விளக்கியது. பாட நேரங்கள், பாட ஆசிரியர்கள், அவர்களுக்கு ஒதுக்கியுள்ள நேர அளவுகள், பாடசாலை இணைச் செயற்பாடுகள் (Co curricular activities) முதலான பல அம்சங்களையும் நேரசூசி கொண்டிருத்தல் வேண்டுமென்று அவர் எடுத்துக் காட்டினர். திரு சபாநாயகத்தின் ஒரு கருத்து மிகவும் முக்கியமானது அவர் சொன்னர், "நேரசூசி தயாரிக்கும் பொழுது ஆசிரியர்களுக்குப் பாடவிடுகைகள் (Free Periods தரப்படுவது ஒரு சலுகைமட்டுமே அது உரிமையென்று ஆசிரியர் கொள்ளலாகாது அந்நேரங்களிலே வருகைபுரியாதிருக்கும் ஆசிரியர்களின் பாடங்களை இவர்கள் கற்பித்தல் வேண்டும். இத்தகைய பதிற்கடமைகள் நாள்தோறும் அதிபர்கள் வரையறுத்துக் குறித்த ஆசிரியர்களுக்கு அறிவித்து அவர்களைப் பதிற்கடமை புரிய வைத்தல் வேண்டும்."

அதிபர் ஒருவர் தம்மைத் தாமே மதிப்பிடுதலுக்கான வழிவகைகள், ஆசிரியரை மதிப்பிடுதற்கான வழிவகைகள், பாடசாலையை மதிப்பிடுதற்கான வழிவகைகள்பற்றியும் இச்சேவைக்கால வகுப்பில் ஆராயப்பட்டன. இவை தொடர்பான கேள்விக்கொத்துக்கள் வழங்கப்பட்டன. இவை அதிபர்களைச் சிந்திக்கத் தூண்டி எதிர்காலத்திலே தங்கள் கடமைகளைத் திறம்படச் செய்ய உதவியாகும் என்பது உறுதி

இன்றைய அரசு, கல்விக்கென வகுத்தமைத்துள்ள புதிய கல்வித்திட்டமானது எல்ல நிலைகளிலும் மாணவரின் எல்லாவித வளர்ச்சிக்கும் உறுதுணையாகும் என்றே கொள்ளக்கிடக்கிறது. இலங்கை முழுவதும் இருபத்தைந்து கல்வி வலயங்களாகப் பிரித்து மூலாதாரப் பாடசாலைகள் சார்புப்பாடசாலைகள் எனப் பாடசாலைகளை வகையீடு செய்து எல்லாமாணவரும் கல்வியிற் சம உரிமை பெறத்தக்க வாய்ப்பினை இபபுதிய கல்வித்திட்டம் வழங்கும் எனக்கல்வியாளர் நம்புகின்றனர். எனவே இது தொடர்பக அதிபர்களுக்கு நடத்தப்பட்ட சேவைக்கால வகுப்பு சகல விதத்திலும் பயனுள்ள ஒன்று என்றே சொல்லத் தோன்றுகின்றது. இவ்வகையில் இதனை ஒழுங்கு செய்து நடத்திய யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தினரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பாராட்டிற்கு உரியவர்கள்.


## 31-ம் நாள் நினைவஞ்சலி



அருச்சுனராசா ஜெயரட்ணராசா

ஆண்டவன் படைப்பு:
06-03 1955

ஆள்பவன் அழிப்பு:
09 05 1985

அருச்சுனராசா நந்தகுமார்

ஆண்டவன் படைப்பு:
05-04-1963

ஆள்பவன் அழிப்பு.
14-04 1985

அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி திடீரென எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தாய், மனைவி, மக்கள், குடும்பத்தினர்.

சின்னவளை, பொலிகண்டி. 3675




இலங்கையில் புதிய இந்திய உயர் ஸ்தானிகராக நியமனம் பெற்றுள்ள திரு. ஜே. டிக்ஸிற் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜயவர்த்தனவைச் சந்தித்து தமது நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கிறார்.

### யாழ். மேர்சன்ட் பிறுன்ஸில்

## கொள்ளைபோன பொருட்கள் திரும்ப கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மேர்ச்சன்ற் பிறுன்ஸ் ஸ்தாபன களஞ்சியத்தில் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள் எதுவும் திரும்பக் கிடைக்கவில்லை.

கடந்த திங்கட்கிழமைஇரவு இனந்தெரியாதவர்களினல் துப்பாக்கிமுனையில் இக்கொள்ளை நடந்ததாகக் கூறப்படுகிறது.

முன்னுள் இலங்கை வங்கி பொது முகாமையாளரான செ. லோகநாதனுல் இந்த ஸ்தாபனம் 1979-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

இப்பகுதி பணம் வேறுநிதி நிறுவனங்களுக்கூடாக நாட்டின் மறு பகுதிகளை வளம்படச் செய்வதைத் தடுத்து இப்பகுதி பணத்தில் இப்பகுதியை வளம்படுத்தும் நோக்கமாகவே இந்த ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (க)


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற பன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த இராமலிங்கம் சுப்பிரமணியம் பெண் திலகரட்ணம் என்பவரின் மரணசாதன மற்ற சொத்து விடயத்தில்
—மரணமெய்தியவர்.

மரணசாதன ) T 3844
நியாயாதிக்கம் )

சுப்பிரமணியம் பரமராஜா
ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
எதிர் மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுளளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு மாசி மாதம் 8ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக்காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1984ம் ஆண்டு ஐப்பசி மாதம் 15ம் தி. தி.

நீதிமன்றக் கட்டளைப்படி
கு. குலசிங்கம்,
பதிவாளர்.


தயாரித்தவர்:
ச. அபிமன்னசிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.
3 5 85

காரணம் காட்டும் திகதி 14-6-85க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கு. குலசிங்கம்,
பதிவளார்.

3679

## மேர்ச்சன்ற் பினுன்ஸ் தாபகர் நினைவுதினம்



மேர்ச்சன்ற் பினுன்ஸ் கொன்சல்ற்ரன்சி அன்ட் பினுன்ஸ் அன்ட் டெவெலெப்மன்ற் ஆகிய தாபனங்களின் தாபகர் செல்லையா லோகநாதன் சிவபதமடைந்த மே 4-ம் திகதியன்று இத்தாபனங்களின் நிர்வாகிகளும் ஊழியர்களும், வழமைபோல் முத்துத்தம்பி அனுதை இல்லத்தவர்களுடன் சேர்ந்து மதியபோசனம் சமைத்து உண்டும், விஷேசமாக தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப்பிரிவில், அடிக்கடி ஏற்படும் மின்தடையினுல் உண்டாகும் அவஸ்தைகளைத், தவிர்க்க வைத்திய அதிகாரியின் வேண்டுகோளின்படி, 2800 வாட்ஸ் ஜெனறேற்றர் ஒன்று அன்பளிப்புச் செய்தும் தாபகரை நினைவுகூர்ந்தார்கள்.

# "வகுப்புவாத கட்சிகளினுல் இலங்கைப் பிரச்னை தீர்க்க முடியாது"

## கம்யூனிஸ்ட் வைத்திலிங்கம் பேச்சு

(புலோலி - கரவெட்டி நிருபர்)

"இலங்கையில் உள்ள வகுப்புவாதக்கட்சிகளாலும், அவற்றின் தலைவர்களாலும் இந் நாட்டு மக்களை ஒற்றுமைபடுத்தவோ அல்லது இனப்பிரச்னைக்கு சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்வைகாணவோ முடியாது. எமது பிரச்சினைகளுக்கு சுமுகமான நிரந்தர தீர்வு காண வேண்டுமானுல் தமிழ் சிங்கள உழைக்கும் வர்க்கத்தைக் கொண்ட அரசாங்கம் உருவாக வேண்டும்".

இவ்வாறு கல்விமானும், பிரபல தொழிற்சங்கவாதியுமான திரு. அ வைத்திலிங்கத்தின் 70 வது பிறந்த தினத்தையொட்டி கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடை கூட்டத்தில் உரையாற்றிய திரு. வைத்திலிங்கம் குறிப்பிட்டார். கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபைத் தலைவர் திரு. ரீ. சிதம்பரப்பிள்ளை கூட்டத்திற்கு தலைமை தாங்கினுர். திரு. வைத்திலிங்கத்திற்கும் முன்னுள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. க. சிவசிதம்பரத்திற்கும் இவ் விழாவில் பாராட்டுரைகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து உரையாற்றிய திரு வைத்திலிங்கம் குறிப்பிட்டதாவது.

"இவ்வருடம் பாசிசத்தை முறியடித்த 2ம் உலக போரின் 40ம் ஆண்டு நிறைவு ஆண்டாக் கொள்ளவேண்டும். இப் போரில் சோவியத் யூனியன் 2 கோடி மக்களை இழந்து உலக வரலாற்றில் சோசலிச ஜனநாயக வெற்றித் திருநாடாக இடம் பெற்றது ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டு மக்களே பாசிசத்தை எதிர்த்துப் போராட திடசங்கற்பம் பூணவேண்டும். 2ம் உலக போரில் ஹிட்லர் சோவியத் யூனியனை ஒழித்துக்கட்டுவதற்காக மேற்கு ஐரோப்பிய நாடுகளிடம் ஒத்துழைப்பு கேட்டபோது அந்நாட்டு மக்கள் அதைவன்மையாக எதிர்த்தால் அத்திட்டம் கைவிடப்பட்டது. ஆயுதப்பரிகரணம் உலக சமாதானம் விண்வெளிப்போர்கள். ஆகியனவற்றை முழுமூச்சாக எதிர்க்கும் சோவியத் யூனியன் இந்துமகா சமுத்திரத்தை வல்லரசுகளின் வா.வியாக மாற்றக் கூடாதென்றும் வற்புறுத்திவருகின்றது".

யாழ். மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் பொன் குமாரசாமி உரையாற்றுகையில் உலக ஏகாதிபத்திய நாடுகள் உலகை வென்று தங்களுக்குள் பங்கு போடாமல் தடுத்த பெருமை சோவியத்யூனியனுக்கே உரியது.

சோவியத் யூனியன் பாசிசத்தை வென்றதன் விளைவாகவே இன்று பல நாடுகள் சுதந்திரமாக தலை தூக்கி நிற்கின்றன.

சட்டத்தரணி வ. மகாலிங்கம் தெணியான் திரு. க சிதம்பரப்பிள்ளை திரு மூ. வேலுப்பிள்ளை ஆகியோரும் பாரட்டுரைகளை வழங்கினுர்கள்.

## நுளம்பு வலைகள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் நேற்று முன்தினம் காலை இனந்தெரியாதவர்களினுல் அங்கிருந்த 23 நுளம்பு வலைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

வான் ஒன்றில் வந்த மூவர் இக் கொள்ளையை நடத்தியதாகவும், இவர்களில் ஒருவர் துப்பாக்கி வைத்திருந்ததாகவும் மற்றம் இருவர் கூடவந்ததாகவும் என்றும் கூறப்படுகிறது.

இந்தவலைகள் கடனுக வழங்கப்பட்டிருந்ததாகவும், இவ் வலைகளை உரியவர்கள் எடுத்துச் செல்லாததினுல் அவை மக்கள் வங்கி கிளையில் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

[க]

## இன்றைய பலன்

மாதம்-வைகாசி
திகதி-26 (8-6-85)
நாள்-சனி
திதி-ஷஷ்டி பின்னிரவு
நக்ஷத்திரம்-அவிட்டம் பின் இரவுவரை

மேடம்:- அமைதிக்கு பங்கம் ஏற்படும் சம்பவங்கள் ஏற்படலாம். நெருங்கிய உறவினர் ஒருவருடைய உடல் நலம் பாதிக்கப்படலாம். நிதானம் நன்று.

இடபம்:- உறவுகள் பலப்படும் உள்ளத்தில் உவகை துள்ளும். உயர்வுக்கு வழி பிறக்கும். தாய்வழி சுகாதாரம் வேண்டும்.

மிதுனம்:- எண்ணியது எண்ணியபடி இன்று நடக்கும் உத்தியோகத்தர்களாயின் நிர்வாகத் திறமையில் முதலிடம் பெறுவார்கள். அதிஸ்ட தினம்.

கடகம்:- கருடட்பார்வை உங்களை வட்டமிடும் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவார்கள் சிலருக்கு அன்னிய வாசமும் அகால போசனமும் உண்டு.

சிங்கம்;- இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்குக் கிடைக்கும். இல்லம் பல்கலைக் களகமாகமாறும் அறிஞர்களின் வருகையும் உண்டு. கழஸ்திர வழியாலும் கண்ணியம் சேரும்.

கன்னி:- வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம் அவசரப் போக்கினுல் ஆபத்துக்கள் விளையலாம். வாழ்க்கையில் பிரிவுத் துயர் வாட்டக்கூடும்.

துலாம்:- பிதாவழிமூலம் மகிழ்ச்சிதரும் செய்தியொன்று கிடைக்கலாம். ஏழைகளிடத்தில் இரக்கம்காட்டுவீர்கள். பெரியாரின் ஆதரவு தவறுமல் கிடைக்கும்.

விருச்சிகம்:- திருப்திகரமான மாற்றங்களுக்கு இடமுண்டு. நுட்பமான தொழில் புரிபவர்கள் பராட்டப்படுவார்கள். திறமையான நடவடிக்கைகளின்மூலம் பணவரவும் உண்டு.

தனுசு:- புதுமையான சம்பவங்கள் நடைபெறும் சிலருக்கு

[-7ம் பக்கம் பார்க்க]

COLOMBO - BERLIN
பிரயாணம்

13, 17ந் திகதிகளில் பிரயாணம் செய்பவர்கள் உடனடியாகப் பதிவு செய்துகொள்ளவும்.

முன்பணம் அவசியமில்லை.

கொழும்பில் தங்குமிட வசதி, மற்றும் பாஸ்போட், பொண்ட், விஸா, பிரயாணக் காசோலைகள் பெறுவதற்கான உதவிகள் செய்துகொடுக்கப்படும்.

லிப்ருஸ் லிமிட்டெட்,
R. G. பில்டிங், 70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

COLOMBO
LIBRAS LTD.
PAUL VI CENTRE,
24, FRONT STREET,
COLOMBO-1

★ தூய அலுமினியம் ★ பிளாஸ்டிக்
★ எவர்சில்வர் ★ எனுமல் ★ கண்ணுடி
★ தாச்சி வகைகள் ★ ஒக்கிட் (ORCHID) வாளிகள்
போன்ற பொருட்கள்

மங்கள வைபவங்களுக்கு உகந்த அன்பளிப்புப் பொருட்கள் யாவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கு எமது உற்பத்திப் பொருட்களும் மற்றும் எனுமல், பிளாஸ்டிக் ஒக்கிட் வாளிகளும் விசேட கழிவுடன் வழங்கப்படும்.

நியூலங்கா
அலுமினியம் தொழிற்சாலை
(விற்பனைப் பிரிவு)
இல: 6, 30, ஆஸ்பத்திரி வீதி, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.
போன்: 23596

மிளகாய் இலைச் சுருளைத் தடுதது
அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF
குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய 80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது




இது ஒரு "மேற்கு ஜேர்மனி 'BASF'" தயாரிப்பாகும்.

குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 18/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

மக்வுட்ஸ் ஸ்தாபனம்
2 ஞானுர்த்தபிரதிப மாவத்தை, த.பெ.இல-9
(முன்னுள் மருதானைரேட்) கொழும்பு - 8
தொலைபேசி; 597965—9

Metropolitan

# நிர்வாகிகள் தெரிவு

[சுண்டுக்குளி]

யாழ்ப்பாணக் கல்லூரி வை. எம். சி. ஏ யின் 101வது வருடாந்த கூட்டமும் இயக்குனர் சபை கூட்டமும் அண்மையில் நடைபெற்றது இதில் 101வது வருடாந்த உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர்: திரு. டபிள்யூ. என். தேவகடாட்சம், மாணவ தலைவர்; செல்வன் டபிள்யு குலேந்திரன் செயலாளர்; ஏ. ஜெயராசா, மாணவ செயலாளர்: செல்வன் ஏ. நிர்மலன், பொருளாளர்: எஸ் ஜே. மாணிக்கம், மாணவ பொருளாளர்: செல்வன் ஏ. சித்திரஞ்சன்.

இத்துடன் 7 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0 0

(சுழிபுரம்)

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய அபிவிருத்திச்சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் வித்தியாலய அதிபர் திரு சி. விசுவலிங்கம் தலைமையில் நடைபெற்றது. புதுவருட உத்தியோகத்தர் தெரிவில் பின்வருவோர் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு சி. விசுவலிங்கம், உபதலைவர்கள்; வைத்தியகலாநிதி செ. வைத்தியலிங்கம், திரு. இ. தம்பிராசா, காரியதரிசி: திரு. க. வாமதேவன், உபகாரியதரிசி: திரு இ. கிருஷ்ணதுரை, தனாதிகாரி: திரு. அ. நடராசா.

# தமிழ் அகதிகள் நிலையும் . . .

(4ம் பக்கத் தொடர்ச்சி)

றனர். கூட்டரசாங்கத்தில் உள்ள சில கட்சிகள் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு உண்மையாக அரசியல் தஞ்சம் தேவைப்படுவோர் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற நிலையில் உள்ளன அரசாங்கத்திலுள்ள பெரும்பான்மை கிறிஸ்தவ ஜனநாயகக்கட்சி இவ்வறிக்கையைக் காட்டி ஐ. நா வின் மனித உரிமைகளுக்கான உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி அவரின் கருத்தை மாற்ற வேண்டுமெனக் கருதுகிறது. ஐ நாவின் மனித உரிமை ஆணைக்குழு இலங்கை அகதிகள் திருப்பி அனுப்பபடுவதை ஏற்கவில்லை. எப்படியிருப்பினும் இந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படும் என்பது பெரும்பாலும் நிட்சமாகிவிட்டது. நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் அகதிகள் தனிப்பட்ட முறையில் தமது கோரிக்கையை நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்ல முடியும். எனினும் இந்த வழி கால தாமதத்தையும் சிக்கலையும் ஏற்படுத்தும்.

உண்மையில் இலங்கைக்கு வந்து திரும்பிய நெதர்லாந்து வானொலி ஆங்கிலசேவை தயாரிப்பாளர் ஜோகநாதன் மார்க்ஸ் கருத்து தெரிவிக்கையில், வெளிநாட்டைப் பொறுத்தவரை இலங்கையில் உள்ள நிலமை குழப்பமாக தென்படுவதாகக் குறிப்பிட்டார் தென் இலங்கையில் மட்டும் விடுமுறையை கழித்து விட்டு வரும் உல்லாசப்பயணிகளுக்கு பிரச்சனையின் ஆழம் தெரிய வாய்ப்பில்லை வடகிழக்கிற்கு அவர்களால் செல்ல முடியவில்லை அங்கு செல்ல விஷே-அனுமதி தேவைப்படுகிறது. எனக் கூறிய அவர் நான் திருகோணமலைக்கு சென்றதாகவும் அங்கு அப்போது வன்முறை இல்லை எனவும், ஆனால் இப்போது நிலமை அப்படி இருப்பதாக கூறமுடியாது எனவும் குறிப்பிட்டார். வெளிநாட்டு நிருபர்கள் கொழும்பில் இருந்து செயல்பட வேண்டி இருக்கிறது. தூர இடங்களின் நிகழ்வுகள் அவர்களால் சரிவர அறிந்து கொள்ள முடிவதில்லை போக்குவரத்து வசதிகளும் குறைவு. இந்நிலையில் அவர்கள் பிரச்சினையின் ஆழத்தை சரிவர உணர்ந்து தமது 3, 4 நிமிட செய்தி அறிவிப்புக்குள் அனைத்தையும் அடக்குவது சிரமம். தம்மைச் சந்தித்த அனைவரும் இப்பிரச்சனை பற்றி உரையாட தவறவில்லை எனக் கூறினர். எது எப்படி இருப்பினும் இலங்கையில் இன்றுள்ளகுழப்ப நிலை காரணமாக அங்கு செல்லும் உல்லாசப்பயணிகள் தொகை வெகுவாக குறைந்து விட்டது. என்றார் அவர்.

அறிக்கை பற்றி காரசாரமாக விவாதம் நடை பெற்ற போது அதனை தயாரித்த ஆணைக்குழுவின் தலைவரான ஓரி வைனன் மௌனம் சாதித்தார். நாடாளுமன்றத்தில் அறிக்கை விவாதத்திற்கு எடுத்து கொள்ளப்படும் தருணத்தில் நிருபர்களின் கேள்விகளுக்கு சுருக்கமாக விடையளித்துள்ளார். தென் இலங்கையில் தமிழருக்கெதிரான நடவடிக்கைகள் இல்லை எனவும், ஆனால் நாட்டில் தமிழர்கள் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர். என்பதை ஏற்றுக்கொள்ளவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அகதிகள் தனிப்பட்ட முறையில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல செய்தால் அவர்களுக்கு பலன் கிட்டுமா? அல்லது இப்போது வெளியாகி இருக்கும் அறிக்கை நீதிபதிகளின் கருத்து ஏதும் தாக்கத்தை ஏற்படுத்துமா? நீதிமன்றத்தில் நியாயம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது எனவும் மேற்கு நாடுகளில் நீதித்துறை சுதந்திரமாக இயங்குவதாகவும் அரசாங்கத்தின் முடிவுகள் நீதித்துறையை பாதிப்பதில்லை எனவும் கூறப்படுகிறது.

நிலமை இவ்வாறு இருக்க அங்குள்ள தமிழ் அகதிகள் பலர் ஏற்கனவே நாட்டை விட்டு வெளியேறத்தொடங்கி விட்டதாகவும் பெல்ஜியம், ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு செல்வதாகவும்கூறப்படுகிறது.

## இன்றைய பலன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு. விருந்தினர்கள் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

மகரம்:- பணம் பறிபோவதற்கு இடம்ஏற்படலாம். முகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்; வாய்வுப் பதார்த்தங்களை தவிர்க்கவும்.

கும்பம்:- குமுறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள். எதிலும் அவசர முடிவைத் தவிர்த்துக்கொள்ளவும். உடல்நலத்தைப் பேணவும்.

மீனம்:- பொதுநல விருப்பும் போதுமென்ற மனமும் மேலிடும். பொருள்வரவுக்கு உகந்த தினம். புண்ணியவிருப்பும் மேலிடும்.

திருமலை
வே ரவீந்திரன்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

காலஞ்சென்ற சிவசம்பு பெண் தெய்வானைப் பிள்ளை, கரவெட்டி மேற்கு பருத்தித்துறை என்பவரின் மரணசாதனமில்லா சொத்தின் விடயத்தில்.

—மரணமெய்தியவர்.

மரணசாதன] நியாயாதிக்கம்] இல. 3854

சிவசம்பு சுந்தரலிங்கம்,
68, குறசெற் ஒழுங்கை
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

—மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு. அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985ம் ஆண்டு சித்திரை மாதம் 26ஆந் நாளன்று முற்பகல் 10 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதமகு காரணம் காட்டுமாறு. இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்

நீதிமன்றக் கட்டளைப்படி
கு குலசிங்கம்,
பதிவாளர்.

வரைவு:
மனுதாரின் பதிவு பெற்ற சட்டத்தரணி.

1984ம் ஆண்டு கார்த்திகை மாதம் 5ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

காரணம் காட்டும் தேதி 28-6-85வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்:
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

3543

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, இல. 760யைச் சேர்ந்த கார்த்திகேசு கனகசபை கைம்பெண், வீரகத்திப்பிள்ளை மகள் அழகு என்பவரின் மரணசாதனம் மற்றும் எழுத்தாவணங்கள் விடயத்தில்.

—மரணமெய்தியவர்.

வழ. இல. ரி / 3849.

கனகசுந்தரம் பெண்
மாணிக்கம்,
பத்தமேனி,
அசசுவேலி.

—மனுதாரர்.

மேற்குறித்த நீதிமன்றத்தில், மேற்குறித்த இலக்கம் கொண்ட மரணச் சொத்து நிர்வாகத்தத்துவ வழக்கு மேற்குறித்த மரணமெய்தியவரின் சொத்துக்களுக்கு நிறைவேற்றுனர் அதிகாரத் தத்துவம் பெறுவதற்காக மேற்குறித்த மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு அதற்கான முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பதிய பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1985ம் ஆண்டு வைகாசி மாதம் 29ந் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி,
ஒப்பம்:
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது.
ஒப்பம்:
த சோமசுந்தரம்,
மனுதாரரின் சட்டத்தரணி.

3646

மொடேர்ண் மினி சினிமா
[ஸ்ரீலங்காஅச்சகவேன் ராஜா தியேட்டருக்கு அருகாமை]
TERROR
கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்.

வின்ஸர்
தினசரி 10-30, 2-00, 4-15
Jerome, Susan in SURVIVAL RUN

லதா மினி
(கோண்டாவில்)
10-30, 3-30,
சிவாஜி - பிரபு K.R. விஜயா
வம்சவிளக்கு

நியூசாந்தி (மினி)
யாழ். சாந்தி சினிமாவில்
[6—7 மட்டும்)
எம். ஜி. ஆர். பானுமதி, பாலையா நடித்த
தாய்க்குப்பின் தாரம்
புதிய பிரதி

சிவன் மினி சினிமா
K. K. S. ரோட் சிவன் கோயிலடி சந்திக்கு முன்பாக
5-6-85 முதல்
10-30. 2-30, 4-30
A V PAIR GIRL
கண்டிப்பாக 18 வயதுக்குட்பட்டவர்கள் அனுமதிக்சப்படமாட்டார்கள். 4 அடித்திரையில் காண்பிக்கப்படுகிறது.

ஹரன் மினி
தினசரி 10-30, 2-30
பிரதாப் — ராதிகா
மீண்டும்
ஒரு காதல் கதை
வெண்திரையில்
விதி
(கலர்)

ஸ்ரான்லி மினி
(சினிமா)
5'X5' திரையில்
மோகன், ராதா நடித்த
அம்பிகை நேரில் வந்தாள்
10-30 மட்டும்
முக்கிய குறிப்பு: பெண்களுக்கு தனி ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது

"DIVINE EMMANUEL"
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
முதல்தரமான பிரதி
2-30, 4-30 மட்டும்

லிடோ சினிமா
சுதாகர் - ராதிகா நடித்த
ஆயிரம் வாசல் இதயம்
(ஈஸ்மன்கலர்புதியகொப்பி)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2.30
பாக்கியராஜ் - சரிதா நடித்த
மௌன கீதங்கள்
(ஈஸ்மன் கலர்)

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2 30
கமலஹாசன்-ஜெயப்பிரதா
சலங்கை ஒலி
கடைசிவாரம்

ஆனந்தி
வீடியோ சினிமா
[மனோகராவில்]
தினசரி 10-30, 2-30
எம். ஜி ஆர் -சரோஜாதேவி நடித்த
ஆசைமுகம்

S T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
காட்சி: 10-30, பி.ப.2-15, 4-30
Emmanuel 111
ஆரம்பமுதல் இறுதிவரை ஒரே குழுமை முற்றிலும் பாலியல் காட்சிகள் நிறைந்த படம். கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

VACANCY
POST OF CASHIER
A Leading Finance Company requires an experienced Cashier immediately
Apply with three referees.
Advertisement No. 203,
C/O. Eelanadu — Jaffna.

காலம் பெறுமதியானது
"வீணே கழியும் ஒரு நிமிடத்தையேனும் மீட்டு உபயோகிக்க முடியாது. எனிலும் இதை அறிந்த பின்னும் எவ்வளவு நேரத்தைவீணுக்குகிறோம்."
—மகாத்மா காந்தி.
உள்நாட்டு மூலப்பொருட்களை உற்பத்திக்கு எடுப்போம்.
உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு கொடுப்போம்.
2 சுப்ப மில்க்வைற் மேலுறைகளைக் கொடுத்து 1 மகாத்மா காந்தி ஸ்ரிக்கரைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
மில்க்வைற் – யாழ்ப்பாணம்.

"ஸ்டொப்" கிளட்ச் & பிறேக் புளுயிட்
STOP
Hydraulic BRAKE & CLUTCH FLUID
மலிவான விலைக்கு
போதியளவு
பெற்றுக்கொள்ளலாம்
விநியோகஸ்தர்கள்:-
டீமோ இன்டஸ்றீஸ் லிமிடெட்
65, ஜேத்தவன வீதி,
கொழும்பு – 14.
தொலைபேசி: 23702-4, 34751.


CHEMANEX
தயாரிப்பு:
கெமனெக்ஸ் லிமிட்டெட்
450 மிலி – ரூ. 27/25
250 மிலி – ரூ. 15/45

### மின்சாரத் தடையினுல்

# தனியார் எரிபொருள் பெறுவதில் தாமதம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் மின்சாரத் தடை காரணமாக நேற்று நண்பகல் வரை தனியாருக்கு பெற்ரேல் வழங்கப்படவில்லை.

கோட்டைக்கு எதிரே உள்ள யாழ். ப. நோ. கூ. சங்க எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக சுமார் 200 வாகனங்கள் 'கியூ'வில் நின்றன. ஆயுதப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ். பொலிஸ் நிலையக் கட்டடத்திலுள்ள பகுதியில் பெற்ரேல் நிரப்புவதற்கான ரசீது பெறுவதற்காக நூற்றுக்கு மேற்பட்டவர்கள் அதிகாலை 7 மணிமுதல் காத்திருந்தனர்.

பெண்களும்' பெற்ரேல் பெறுவதற்காகக் காத்திருந்தனர்,

நேற்றுக்காலை 8 மணிக்கு மின்சாரத்தடை ஏற்பட்டது. நண்பகலுக்குப் பின்னர் மின்சாரம் சீரானதும் எரிபொருள் வழங்கப்பட்டது. (க)

# நீதிபதிகளின் கார்களும் வீதிகளில் நின்றன!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நீதிபதிகளின் கார்களும் நேற்று முன்தினம் பெற்ரேல் நிரப்பிய பின் வீதிகளில் ஓடாமல் நின்றுவிட்டன.

நீதிபதி ஒருவர் பெற்ரேல் நிரப்பிய பின் காரைச் செலுத்தியபோது, அது பிரதானவீதியில் நின்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

நீதிபதிகளுக்குவழங்கப்பட்ட பெற்ரேலில் தண்ணீர் கலந்திருப்பது தொடர்பாக யாழ் ப. நோ. கூ. சங்கத்திற்கும், யாழ். பெற்ரேலியம் கூட்டுத்தாபன கிளைக்கும், அரசாங்க அதிபருக்கும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க]

### யாழ். ஐக்கிய வியாபார சங்க

# ஊழியரின் மரணங்கள் 'கொலை' எனத் தீர்ப்பு

### விசாரணை செய்ய பொலிஸாருக்கு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபார சங்கம் எரிக்கப்பட்ட தினம் காணுமற்போன சங்க ஊழியர்களான நடராசா நவரத்தினராசா, சிவபாதம் ஜெயச்சந்திரன் ஆகியோரின் மரணங்கள் 'கொலை' எனத் தீர்ப்பளித்த யாழ் நீதவான் எஸ், நாகராசா பொலிஸாரை தொடர்ந்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

யாழ் ஆஸ்பத்திரி வீதியில், 84-ம் ஆண்டு ஏப்ரல் 9-ம் தேதி நண்பகல் வாகனம் ஒன்று தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து, நகரில் ஏற்பட்ட பதற்றநிலையின்போது யாழ் ஐக்கிய வியாபார சங்கம எரிக்கப்பட்டது அப்போது இருசங்க ஊழியர்களான ந நவரத்தினராசா, சி. ஜெயச்சந்திரன் ஆகியோர் காணுமல் போனுர்கள். எரிந்த இடிபாடுகளுக்குள் சில எலும்புகள் கண்டெடுக்கப்பட்டு பொலிஸாரினுல் யாழ். நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கபபட்டதை தொடர்ந்து இந்த எலும்புகள் மனித எலும்புகளா? என்பது பற்றியும். அப்படி மனித எலும்புகளாயிருந்தால் அவை யாருடையதென்பது பற்றியும் யாழ். நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் விசாரணை நடைபெற்று வந்தது

## கலப்படத்திற்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வது:

''அரசாங்க அதிபரினுல் சங்கத்திற்கு இம்மாதம் ஆறும் திகதி 10 மணியளவில் அனுப்பப்பட்ட பணிப்புரையின்படி, டாக்டர்களுக்கு 20 லீற்றர் பெற்ரேல் தன்னிடமிருந்து பெறப்பட்ட வழங்கல் சீட்டிலேயே வழங்கப்பட வேண்டுமென பணித்திருந்தார். அதன்படி கூட்டுறவுச் சங்கஊழியர் டாக்டர்களை அரசாங்க அதிபரிடம் வழங்கல் கட்டளை வாங்கிவருமாறு கேட்டது உண்மையே. இந்நேரத்தில் காப்டன் கொத்தலாவலை தாஞகவே சங்க சிட்டைப் புத்தகத்தைப் பெற்று டாக்டர்களுக்கு 25 லீற்றர் வீதம் சிட்டையிட்டு அனுப்பினுர். அதன்படி டாக்டர்களுக்கு பெற்ரேல் உடனடியாக வழங்கப்பட்டது. ஆகவே ரசீது புத்தகம் கொண்டுவரப்படவில்லையெனக் கூறியமை பிழை.

---

# மரண அறிவித்தல்

## Beatrice இராசநாயகம்

### உடுவில்

Beatrice இராசநாயகம் காலமானுர். இவர் காலஞ்சென்ற Dr. இராசநாயகம், திருமதி லில்லி அருளம்மா இராசநாயகம் அவர்களின் அன்பு மகளும், திருமதி Florence சுப்பிரமணியம் (சிங்கப்பூர்), திருமதி Josephine விஜயரத்தினம், திரு. James இராசநாயகம் (அவுஸ்திரேலியா) அவர்களின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்ஞரின் நல்லடக்க ஆராதனை உடுவில் இல்லத்தில் சனிக்கிழமை 08-06-85 3-30 மணிக்கு நடைபெறும். உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திருமதி கிறேஸ் அரசசிங்கம்

உடுவில், சுன்னுகம்.

(3689)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி. 66-ம் இலக்க ஆலயத்தில் 1985ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu PO, Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24116

## நாடு முழுவதும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் 3,510 சிங்களவர்களும், 3,000 முஸ்லிம்களும், 4,000 தமிழர்களும் அகதிகளாக முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

''திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மக்களை வெளியேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன இதனை அரசு கருத்தில் கொள்ளவேண்டும் திருகோணமலையில் தமிழர்கள் அகதிகளாகும்போது அவர்கள் முகாம்களில் தஞ்சமடைகின்றனர். ஆனுல் சிங்களவர்கள் அகதிகளாகும்போது அவர்கள் தென் இலங்கைக்கு ஓடிவருகின்றுர்கள்.

''கொக்கிளாய், நாயாறு பகுதிகளிலிருந்து வெளியேறிய சிங்களமக்கள் தற்போதும் நீர்கொழும்பு அகதிகள் முகாம்களில்தான் தங்கியுள்ளனர். இவர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்புவதற்கான முயற்சிகளை அரசினுல் எடுக்க முடியவில்லை'' என்று தெரிவித்தார்.

## செய்தி பற்றி—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஞர்கள், தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்வதற்குப் பிரயாணவசதி இன்றித் தத்தளித்தனர் ...'' என்று வெளிவந்தது பற்றி இராணுவ உயர் அதிகாரி ஒருவர் நேற்று 'ஈழநாடு'க்குத் தெரிவிக்கையில்; விசாரணையின் பின்னர் முகாமிலிருந்து விடுதலை செய்யப்படும் போது தாங்கள் போக்குவரத்து செலவு எதுவும் கொடுப்பது வழக்கம் இல்லை என்றும் அரச அதிகாரி ஒருவரிடமே இந்த இளைஞர்கள் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் விளக்கமளித்தார்.

நேற்று முன்தினம் 6-ம் திகதி 'ஈழநாடு' இதழில் 'பெயர்: விசாரணை ஆனுல் நடந்ததோ ...'' எனும் செய்தி பற்றி மேற்படி இராணுவ உயர் அதிகாரி அளித்த மற்றுமொரு விளக்கத்தில்; பொதுவாக கணவனும் மனைவியும் விசாரணைக்குட்படுத்தப்படும்போது இருவரும் தனித்தனியாக விசாரணை செய்யப்படுவதில்லை என்றும் குறிப்பிட்ட செய்தியில், இளம் குடும்பப் பெண் தனிமையாக விசாரிக்கப்பட்டார் என்றிருப்பது தவருனது என்றும் தெரிவித்தார்.

## பெற்ரேல்...

(1-பக்கத் தொடர்ச்சி)

ரில் வழங்கப்பட்ட பெற்ரேலில் தண்ணீர் இருப்பது பற்றித் தெரிவித்தார்

நீதிபதிகள், டாக்டர்கள் மற்றும் அரசாங்க ஊழியர்களுக்கும் தொலைபேசி மூலமும், நேரிலும் இதுபற்றிப் புகார் செய்துள்ளனர்,

தங்களுக்கு வழங்கப்பட்ட தண்ணீர் கலந்த பெற்ரேலுக்குப் பதிலாக பெற்ரேல் தருமாறும் அல்லது அதற்குரியபணத்தை வழங்குமாறும் அவர்கள் கோரியுள்ளனர்.

இதுதொடர்பாக யாழ் பெற்ரேலியம் கூட்டுத்தாபன அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது யாழ் ப நோ. கூ. சங்க எரிபொருள் நிலையப் பெற்ரேல் தாங்கியைச் சோதனை செய்தபோது அதற்குள் 6 கலன் தண்ணீர் கலந்திருந்தது கண்டு பிடிக்கப்பட்டதாகவும், உடனடியாக அத்தண்ணீரைப் புறம்பாக்கி நேற்று தனியார்களுக்குப் பெற்ரேல் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

பெற்ரேல் தாங்கியில் எவ்விதத் துவாரமும் இல்லை என்றும், இந்தத் தாங்கி கடந்த 8 மாதமாகப் பயன்படுத்தப்படாமல் இருந்துள்ளதாகவும், இரு தினங்கள் பலத்த மழை பெய்ததினுல் தாங்கி மேல்மூடி மூலம் மழைநீர் சென்றிருக்கலாம் என்றும் தெரிவித்தனர்.

நேற்றுப் பெற்ரேலுக்குரிய பணம் செலுத்தி ரசீது பெற்றவர்களுக்கு மட்டும் இன்று காலை யாழ் ப. நோ. கூ. சங்க எரிபொருள் நிலையத்தில் பெற்ரேல் வழங்கப்படும் என்று ப நோ கூ. சங்கத்தினர் தெரிவித்தனர். (க)

## கலாவதி மரணவிசாரணை

(யாழ்ப்பாணம்)

கலாவதி மரண விசாரணை யாழ். நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் இம்மாதம் 10ம் திகதி நடைபெறவிருக்கிறது.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் சார்ஜன்ட் பூவிலிங்கத்தை அன்றைய தினம் ஆஜர் செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பகுதியில் வீட்டின் கூரையால் விழுந்த பொருள் ஒன்று தாக்கியதால் காயமடைந்து கலாவதி மரணமானுர். (க)

## நெல் மூடைகள் கொள்ளை

(வவனியா)

வவனியா நெல்சந்தைப்படுத்தும் சபையில்இருதடவைகளில் 450 மூடை நெல் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது,

கடந்த புதன்கிழமை இரவு 150 மூடை நெல்லும், நேற்று முன்தினம் 300 மூடை நெல்லும் இரு கட்டமாக கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

## பிரிட்டிஷ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர், நேற்று கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்துக்குச் சென்று தமது நிலையை விளக்கிஞர்

பிரிட்டனில் அரசியல் புகலிடம் கோரும் இவரது விண்ணப்பம் பிரிட்டிஷ் தூதரகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டால் அவருக்கு 'விசா' வழங்கப்படுவதுடன் லண்டனுக்கான இலவச பயணச் சீட்டும் கையளிக்கப்படும் என்று பிரிட்டிஷ் தூதரக அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

(3-ம் பக்கமும் பார்க்க)

## 16 முகாம்கள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இவர்களை பாடசாலைகளிலும் மற்றும் அகதிகள் முகாம்களிலும் தங்க வைப்பதற்கான முயற்சிகள் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

மூதூர், சேருவல எம்.பி.க்களும், திருகோணமலை அரசாங்க அதிபரும் இது சம்பந்தமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

காட்டில் பயந்து வாழும் மக்களை அரசாங்க அதிபர் நேரில் சென்று பார்வையிட்டார்.

## லலித்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ளார்.

அமைச்சர் நேற்று விடுத்த ஒரு அறிக்கையில்; எண்பது பேர் பலியாஞர்கள் என்று வெளியான செய்தி முற்றிலும் தவருனதென்று மறுத்துள்ளார்.

## கொழும்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விருக்கின்றன.

பிந்திய செய்தி:

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட மினி பஸ்கள் பத்திரமாக நேற்றிரவு ஆறரை மணியளவில்கொழும்புபோய்ச் சேர்ந்தன.

## உண்ணுவிரத...

[1ம் பக்கத்தொடர்ச்சி]

மாபெரும் சிகரட் கொள்ளை இவற்ருல் தொடர்ந்து இயங்க முடியாத சூழ்நிலையில் நிர்வாகம் எமது ஸ்தாபனத்தை மூடுவதற்குத் தீர்மானித்துள்ளது. இதனுல் வேலை இழக்கும் 200 ஏழைத் தொழிலாளர்கள் உண்ணுவிரதம் மேற்கொள்கிருேம என்பதனை மனவேதனையுடன் தெரிவித்துக்கொள்கின்ருேம். (க)

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய மக்கள் வங்கிப் பாதுகாப்பு ஊழியர்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 12-ம் திகதி புதன்கிழமை காலை யாழ் பிரதான வீதியிலுள்ள மக்கள் வங்கித் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவனியா, முல்லைத்தீவு. மன்னர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கே இங்கு நடைபெறவுள்ளது (கரவெட்டி. நிரு)

## மோட்டார் சைக்கிள் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன் தினம் காலை மோட்டார் சைக்கிள் ஒன்று கடத்திச் செல்லப்பட்டது

வானில் வந்த இனந்தெரியாதவர்கள் இந்த மோட்டார் சைக்கிளைக் கடத்திச் சென்றதாகக் கூறப்படுகிறது. (க)

## ரூபவாஹினி புதிய கோபுரங்கள்

(கொழும்பு)

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கென இரண்டு ஒலிபரப்பு கோபுரங்கள் அமைக்கப் பட்டு வருகின்றன.

நமுனுகல மலை உச்சி, இரத்தினபுரியிலுள்ள சிறியகந்த ஆகிய இடங்களிலேயே இக்கோபுரங்கள் அமைக்கப்படுகின்றன. (ரா)

## வாகனக் கடத்தல் அதிகரிப்பு

(வவனியா)

வவனியா நகரில் தனியார் வாகனக் கடத்தல் அதிகரித்துள்ளது.

தென்னிலங்கை பகுதி வாகனங்களை நகரில் அதிகம் காணக்கூடியதாக இல்லை.

நடமாட்டம உள்ள வேளையிலேயே வாகனக் கடத்தல்கள் இடம் பெறுகின்றன.

## ரயில் பயணிகள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொழும்பு நோக்கிச் சென்ற இரவு மெயில் ரயிலில் பிரயாணம் செய்தவர்கள் மகோவில் வைத்து தாக்கப்பட்டதுடன், பிரயாணிகளின் உடைமைகளும் கொள்ளையடிக்கப்பட்டுளளன.

## ஊர்காவல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீவிரவாதிகள் இந்த வானுக்கு முன்பாக மோடடார் சைக்கிளில் சென்றனர் என்றும், இவர்களைப் பின தொடர்ந்து ஹெலிகாப்டரில் சென்ற விமானப்படையினர் துப்பாககிப் பிரயோகம் செய்தனர்என்றும் தெரிவிக்கப்பட்டது

இராணுவத்தினரும், பொலிசாரும் இவர்களைத துரத்திச் சென்று நடத்திய துப்பாககிப் பிரயோகத்தில் மோட்டார் சைககிளில் சென்ற ஒரு தீவிரவாதி துப்பாககிச் சூட்டுககு இலக்கான அதேவேளை வானில் வந்த ஏனையவர்கள் காட்டுக்குள் தப்பிச்சென்று விட்டதாகவும் அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டது.

தீவிரவாதிகளால் கைவிடப்பட்ட வாகனத்திலிருந்து 13 துப்பாக்கிகளும், 2 கைககுண்டுகளும், ஒரு இயந்திரத் துப்பாக்கியும் இராணுவத்தினரால் மீட்கப்படடுளள அதேவேளை செட்டிகுளத்துக்கருகிலுள்ள உருலுகல என்னும் பிரதேசத்தில் இராணுவத்தினர் தொடர்ந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரா)